Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 220 | திங்கட்கிழமை 04 ஜூலை 2022 | ஆனி 20 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை : ரூ. 50

## தனியார் பேருந்துச் சேவை முடங்கும்

விரிவு - பக். 05

## இலங்கையிலிருந்து தப்பிக்க முயன்றோர் மீண்டும் மாட்டினர்

விரிவு - பக். 11

முச்சந்தி முரளி



"எல்லாமே தன்ர பாட்டில முடங்கிட்டுதாம்.. இனி அரசாங்கம் முடக்கினால் என்ன, முடக்காட்டி என்ன?"

## வடக்கு பாடசாலைகளும் மூடப்படும் பரீட்சைகள் மெய்நிகர் வழியில்

### கல்வி அமைச்சின் செயலர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 4
கல்வி அமைச்சின் அறிவிப்புக்கு அமைவாக வடக்கு மாகாணத்திலும் பாடசாலைகள் இன்று தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரையில் நடைபெறமாட்டாது. ஆனால், பரீட்சைகள் மெய்நிகர் வழியில் இடம்பெறும். 15



## திருக்கேதீச்சரத்தில் 28 அடி சிவன் சிலை; நாவலர் சிலை திறப்பு

### எண்ணெய்க் காப்பும் ஆரம்பம்

மன்னார், ஜூலை 4
மன்னார், திருக்கேதீச்சர ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பாலாவி தீர்த்தக் கரையில் ஆறுமுக நாவலருக்கான சிலையும், திருக்கேதீச்சர ஆலயத்துக்கு உள்நுழையும் வீதியில் சுமார் 28 அடி உயரமான சிவன் சிலையும் நேற்றுத் 15

## பேக்கரி உற்பத்திகள் இனி வீடு தேடி வராது

### பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4
பெற்றோல் தட்டுப்பாடு காரணமாக யாழ். மாவட்டத்தில் பேக்கரிகளில் உற்பத்தி செய்யப்படும் பாண் உட்பட பேக்கரி உற்பத்திப் பொருள்களைக் கொண்டுசென்று விநியோகம் செய்ய முடியாத நிலை உருவாகி 15



## ரோக்கன் நடைமுறை இனி இல்லவேயில்லை

### வரிசைகளில் நிற்காதீர்கள் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூலை 4
எரிபொருள் கப்பல் குறிப்பிட்ட தினத்தில் நாட்டை வந்தடையாது என்ற அறிவித்தல் விடுக்கப்பட்ட தினத்தன்று, வரிசைகளில் காத்திருந்தவர்களுக்கு மாத்திரமே பதிவு செய்து ரோக்கன் வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. எனவே தற்போது எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்குச் சென்று ரோக்கன்களைக் கோரவோ அதற்காக காத்திருக்கவோ வேண்டாமென்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர பொது மக்களைக் கேட்டுக்கொண்டார். 15

## அடுத்த வாரம் நாடு முடக்கம்?

### உயர்மட்டம் ஆராய்வு இறுதி முடிவில்லை

கொழும்பு, ஜூலை 4
நாட்டைத் தற்காலிகமாக முடக்குவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் எனினும் இது 15

## ரயில் மோதியதில் குடும்பத்தலைவர் சாவு!

### மன்னாரில் சம்பவம்

மன்னார், ஜூலை 4
ரயில்வே கடவையை கடக்க முயன்ற குடும்பத்தலைவர் ரயிலுடன் மோதி உயிரிழந்துள்ளார். 15

### எரிபொருள் வழங்கல் சீராகும்வரை

## யாழில் சமுர்த்திப் பணியாளர்கள் இன்று முதல் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ். மாவட்டத்தில் சமுர்த்திப் பணியாளர்கள் இன்று முதல் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் மாவட்டச் செயலருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இதனைத் தெரிவித்துள்ளது. 15



## ரம்புட்டான் விதையை விழுங்கிய 10வயதுச் சிறுவன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4
ரம்புட்டான் விதையை உட்கொண்ட 10 வயதுச் சிறுவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.
தெல்லிப்பழை - கொல்லன் கலட்டியைச் சேர்ந்த தர்மராசா தர்சிகன் 15

## 1990 அம்புலன்ஸுக்கான அழைப்புக்கள் அதிகரிப்பு

### எரிபொருள் நெருக்கடியால் சேவை தாமதமாகலாம்

கொழும்பு, ஜூலை 4
1990 அம்புலன்ஸ் சேவைக்கு சராசரியாக நாள் ஒன்றுக்கு ஆயிரம் அழைப்புக்கள் கிடைத்துவந்த 15

### நேற்று ஒரேநாளில்

## யாழ்., கிளி.யில் பதுக்கப்பட்ட 7, 400 லீற்றர் டீசல் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ்ப்பாணத்தில் அளவெட்டி மற்றும் தும்பளை பகுதியிலும், கிளிநொச்சியில் காரடிப்போக்குப் 15

## பெற்றோல், மண்ணெண்ணெய் வழங்கவுள்ளது மலேசியா!

கொழும்பு, ஜூலை 4
50 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் மற்றும் 10 ஆயிரம் மெற்றிக் தொன் மண்ணெண்ணெய் என்பவற்றை வழங்குவதற்கு மலேசிய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

விரிவு - பக். 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி அமைச்சர் பதவியிலிருந்து விரைவில் ரணில் நீக்கப்படலாம்

## உட்தரப்புத் தகவல்கள் கசிவு

**கொழும்பு, ஜூலை 4**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரைவில் நிதியமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்படலாம் என அரசாங்கத்தின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

சர்வதேச நாணய நிதியத்துடன் நடைபெற்ற கலந்துரையாடல்களை வெற்றிகரமாக முடிக்க ரணில் விக்கிரமசிங்க தவறியதன் காரணமாக அவரை நிதியமைச்சர் பதவியில் இருந்து நீக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சை ஆரம்பித்த முன்னாள் நிதியமைச்சர் அலி சப்ரி மீண்டும் நிதியமைச்சராக நியமிக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றபோதும், இந்தத் தகவல் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தில் நிதியமைச்சராகப் பதவி வகித்த பஸில் ராஜபக்ச பதவி விலகியதை அடுத்து, அலி சப்ரி நிதியமைச்சராகவும், நீதியமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவியில் இருந்து விலகியதை அடுத்து முழு அமைச்சரவை அமைச்சர்களின் பதவிகளும் இல்லாமற்போயின. இந்த நிலையில் புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டு புதிய அமைச்சரவையும் அமைக்கப்பட்டது. நீண்டகாலமாக நிதியமைச்சர் நியமிக்கப்படாத நிலையில், ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சராக பதவியேற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

### தம்புள்ளயில்

# எரிபொருள் வழங்கக்கோரி பொதுமக்கள் போராட்டம்!

கொழும்பு, ஜூலை 4

நாடுமுழுவதும் எரிபொருள் வழங்குமாறு கோரி போராட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள் உச்சத்தை தொட்டுள்ள நிலையில், தம்புள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்துக்கு அருகில் பொதுமக்கள் தமக்கு எரிபொருள் வழங்குமாறுகோரி நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்ட எரிபொருள், வரிசையில் காத்திருந்த மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது எரிபொருள் கையிருப்பு தீர்ந்துவிட்டதாக எரிபொருள் நிலைய ஊழியர்கள் கூறியதையடுத்து, நிலத்தடி களஞ்சிய தாங்கிகளை திறந்து காண்பிக்குமாறுகோரி பிரதான வீதியை மறித்து மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அங்கிருந்த சிலர் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் என்றும், பின்னர் அது மோதலாக மாறியதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த நிலையில் ஐவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ய)



# பிரதமர் ரணிலுக்கு அவகாசம் தேவை!

## பழனி திகாம்பரம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

'நெருக்கடியான நிலைமையில்தான் பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார். எனவே, அவரை உடனடியாக விமர்சிக்காமல் அவருக்குக் காலஅவகாசம் வழங்கவேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் இணைத்தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'நாட்டில் தற்போது சர்வாதிகார ஜனாதிபதியே ஆட்சியில் இருக்கின்றார். தன்னை நம்பி வாக்களித்த 69 லட்சம் மக்களையும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஏமாற்றியுள்ளார். அவருக்கு முழு அதிகாரமும் இருந்தும் அவர் நாட்டை முன்னேற்றாமல் சீரழித்துவிட்டார். இந்தநிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றிருந்தால் அவரையும் ஜனாதிபதி சுதந்திரமாகச் செயற்பட விட்டிருக்கமாட்டார்.

எனவே, ஜனாதிபதி உடன் பதவிவிலக வேண்டும். அவர் பதவி விலகிய பின்னர் சர்வகட்சி அரசாங்கம் அமைந்தால் அதற்கு சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் மட்டுமல்ல அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பியினரும் ஆதரவு வழங்குவார்கள். இதை இரு கட்சிகளின் தலைவர்களும் வெளிப்படையாகவே தெரிவித்துவிட்டார்கள்' -என்றார். (ம)

# மூடப்பட்டுள்ள சிபெட்கோ எரிபொருள் நிலையங்கள்

## 15 ஆயிரம் பேர் வேலையிழப்பு

கொழும்பு, ஜூலை 4

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் உள்ள ஆயிரம் எரிபொருள் நிலையங்கள் மூடப்பட வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதனால் சுமார் 15 ஆயிரம் பணியாளர்கள் நிலையான வேலைவாய்ப்பின்றி உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாள்களாக எரிபொருள் விநியோகம் இல்லாததால் பெற்றோலியக் கூட்டுத்தாபன விநியோக வலையமைப்பின் கீழ் இயங்கும் ஆயிரத்து 160 எரிபொருள் நிலையங்கள் முற்றாக மூடப்பட்டுள்ளன. அதேவேளை பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்க சுமார் 50 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மட்டுமே திறக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# ரஷ்யா செல்லும் இலங்கைக் குழு!

கொழும்பு, ஜூலை 4

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ரஷ்யாவின் ஆதரவைப் பெறுவது தொடர்பாக ஆலோசிப்பதற்காக இலங்கைக் குழுவொன்று எதிர்வரும் 9ஆம் திகதி ரஷ்யா செல்லவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல்களில் இலங்கை அரசின் சார்பில் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த மற்றும் முன்னாள் ரஷ்ய தூதுவர் கலாநிதி சமன் வீரசிங்க ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு விசேட கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 9ஆம் திகதி ரஷ்யா செல்லவுள்ள இவர்கள் இருவரும் எதிர்வரும் 15ஆம் திகதி வரை அந்த நாட்டு அரசாங்கத்தின் உயர்மட்ட பிரதிநிதிகளுடன் பல சுற்றுக் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர். (எ-இ)

# இந்தியாவின் கடனுதவியின் கீழ் 22ஆம் திகதி பெற்றோல் கப்பல்

## எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்துக்கு 11 மில்லியன் டொலர் செலுத்தப்பட்டுள்ளது என்றும், எதிர்வரும் 22 அல்லது 23ஆம் திகதியளவில் இந்தியாவின் கடனுதவித் திட்டத்தின் கீழ் பெற்றோல் கப்பலொன்று இலங்கைக்கு வரவுள்ளது என்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மின்சக்தி அமைச்சில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் [illegible] இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

டீசல் கப்பலொன்று ஜூலை 5ஆம் திகதி இந்தியாவில் இருந்து புறப்படும். அது ஜூலை 8 அல்லது 9ஆம் திகதிகளில் நாட்டை வந்தடையும். இந்தக் கப்பல் 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலுடன் நாட்டை வந்தடையும்.

இதற்கு மேலதிகமாக விட்டோல் டீசல் கப்பல் ஜூலை 11 முதல் 14ஆம் திகதிகளுக்கு இடையில் நாட்டை வந்தடையவுள்ளது. இந்தியாவின் ஐ.ஓ.சி. நிறுவனத்தின் ஊடாக டீசல் கப்பலொன்று 15 மற்றும் 17ஆம் திகதியளவில் நாட்டை வந்தடையும்.

நாடு முழுவதும் தற்போது பெற்றோலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஜூலை 10ஆம் திகதிக்கு முன்னதாக பெற்றோல் கப்பலொன்றை வரவழைப்பதற்காக 3 புதிய நிறுவனங்களுடன் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. மலேசிய அரசாங்கத்துடனும் பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வது தொடர்பாக பேச்சு இடம்பெறுகின்றது -என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்குச் சுமையாகவே மாறியுள்ளது அரச சேவை!

## கலாநிதி நாலக கொடஹேவா சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜூலை 4**

**அதிகளவிலான ஊழியர்களைக் கொண்ட அரச சேவை நாட்டுக்குத் தேவையற்ற சுமையாக மாறியுள்ளது. இது தொடர்பாக எதிர்காலத்திலும் அரசு கொள்கை முடிவுகளை எடுக்க வேண்டும், ஆள்குறைப்பு செய்ய வேண்டும். இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் முடிந்த வரை சிறியதாக இருக்கவேண்டும் .**

இவ்வாறு முன்னாள் ஊடக அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

'தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு என்ன?' என்ற தலைப்பில் களனி பல்கலைக்கழக மாணவர்கள் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தேவையற்ற சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, வளர்ந்த நாடுகளைப் போல் தொழில்முனைவோருக்கு அதிக இடம் கொடுக்கவேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடனான அரசாங்கத்தின் பேச்சில் முடிவில்லாத இழுபறி நிலையியே தொடர்கின்றன.

எம்மிடம் உள்ள நெருக்கடிக்கு குறுகியகாலத் தீர்வாக சில வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவது என்பது அனைவருக்கும் தெரியும். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சில் இருந்து அரசாங்கம் அதையே எதிர்பார்க்கிறது.

ஆனால் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான நீண்டகால வேலைத் திட்டத்தை அரசாங்கம் முன்வைக்கும்வரை யாரும் எங்களுக்கு கடன் வழங்கமாட்டார்கள். எனவே, நீண்ட காலத் தீர்வுகளை நாம் காண வேண்டும்.

நாட்டுக்கும் சமூகத்துக்கும் பயன் சேர்க்காத பதவிகள் அனைத்தும் குறைக்கப்படவேண்டும். அதற்கான தொலைநோக்கு பார்வையும் அர்ப்பணிப்பும் அரசுக்கு உள்ளதா? என்பதுதான் மீண்டும் கேட்க வேண்டிய கேள்வி. ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசுக்குச் சொந்தமான வணிகங்கள், அதிகாரிகள், துறைகள் மற்றும் பிற நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் பல நிறுவனங்கள் அரசாங்கத்துக்கு எந்த விதமான வருமானத்தையும் வழங்குவதில்லை. இந்த நிறுவனங்களும் அதன் ஊழியர்களும் நாட்டின் செயற்றிறனுக்கு பெரும் தடையாக உள்ளனர்.

'அடுத்த சில மாதங்கள் இன்னும் கடினமாக இருக்கும்' என்று அறிவிப்புகளை வெளியிடுவதற்குப் பதிலாக, அரசாங்கம் தனது வேலைத்திட்டத்தை நாட்டுக்கும் நமது கடன்காரர்களுக்கும் முன்வைக்கவேண்டும். அப்படி ஒரு திட்டத்தை முன்வைக்கும் வரை எங்களை யாரும் காப்பாற்ற வர மாட்டார்கள்.

அரசாங்கம் அத்தகைய திட்டத்தை முன்வைக்காததால் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு தொடர்ந்து இழுத்தடிக்கப்படுகின்றது- என்றார். (ஏ-இ)

# அகதியாக சென்று உயிரிழந்தார் மூதாட்டி

*சென்னை, ஜூலை 4*

*தமிழகத்தை அகதியாக வந்தடைந்த மன்னாரைச் சேர்ந்த மூதாட்டி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். இலங்கையிலிருந்து படகு மூலம் கடந்த மாதம் 27ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை தனுஷ்கோடி சென்ற வயதான தம்பதியர் கடற்கரையில் மயங்கிக் கிடந்த நிலையில் மீட்கப்பட்டு இராமநாதபுரம் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சை பெற்று வந்த பரமேஸ்வரி என்ற மூதாட்டியே நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.* (அ-ஒ-56)

# கைவிரல் அடையாளத்தை இடைநிறுத்தக் கோரிக்கை

சாவகச்சேரி, ஜூலை 4

தற்போதுள்ள போக்குவரத்து நெருக்கடியைக் கருத்திற்கொண்டு அரச திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களில் கைவிரல் பதிவு இயந்திர சேவையைச் சிறிது காலம் இடைநிறுத்தி வைக்க வேண்டும் என்று அரச அலுவலகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு காணப்படும் நிலையில் பலர் பொதுப் போக்குவரத்துச் சேவைகளிலேயே பணிகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட பொதுப் போக்குவரத்துச் சேவைகளே நடத்தப்படுகின்றமையால் பேருந்துகளிலும் நெருக்கடி நிலவுகின்றது. அதனால் உரிய நேரத்துக்குப் பணிக்குச் செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது.

தாமதமாகப் பணிக்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் விரல் ரேகை பதிவு இயந்திரத்தில் பதிவு செய்யும் போது அந்த நாள் விடுமுறையாகப் பதிவு செய்யப்படுகின்றது.

தற்போதுள்ள நெருக்கடி நிலைமை சீராகும் வரையில் கைவிரல் பதிவு இயந்திர சேவையை இடைநிறுத்தவேண்டும் என்று அரச அலுவலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-9)

# வடக்கு கூ.சங்கங்களால் நிர்ணய விலையில் அரிசி

யாழ்ப்பாணம், ஜூலை 4

வடக்கு மாகாணத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் நுகர்வோருக்கு நிர்ணய விலையில் அரிசியை வழங்க வடக்கு மாகாணக் கூட்டுறவு, அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பில் வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எம்.நந்தகோபாலன் தெரிவிக்கையில்;

நெல் சந்தைப்படுத்தும் அதிகார சபையிடம் இருந்து நிர்ணய விலையில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் கிலோ அரிசி கொள்வனவு செய்யப்படவுள்ளது.

சிவப்பு நாடு, வெள்ளை நாடு, கீரிச் சம்பா, சம்பா, வெள்ளைப்பச்சை ஆகிய அரிசி வகைகளே இவ்வாறு கொள்வனவு செய்யப்படவுள்ளன. இவை நுகர்வோருக்கு நிர்ணய விலையிலேயே வழங்கப்படவுள்ளன - என்றார். (ச-17)




**ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும் வண்டியும் ஒரு நாள் ஓடத்தில ஏறுமெண்டு சரியாத்தான் சொல்லியிருக்கினம். இவ்வளவு காலமும் எங்கட சனம் கைவிட்டிருந்த சைக்கிளுக்கு இப்ப கடும் கிராக்கி. ஒரு புதுச் சைக்கிள் 75 ஆயிரம் ரூபா வரை விலைபோகுதாம். அதைவிட பாவிக்காமல், வீட்டு மூலைக்குள்ள கறள்பிடிக்க விட்டிருந்த பழைய சைக்கிள்களையும் திருத்தக் குடுத்து ஓட வெளிக்கிட்டிருக்கினம். இதால இப்ப சைக்கிளுக்கும், சைக்கிள் பார்ட்ஸுக்கும், சைக்கிள் திருத்திறவைக்கும் தனி மதிப்பு வந்ததோட, தட்டுப்பாடும் வந்திருக்கு. இப்பிடியே போனால் பெற்றோல் செற் மாதிரி, சைக்கிள் விக்கிற கடையளிலையும், திருத்திற கடையளிலையும் ரோக்கன் குடுத்தாலும் குடுப்பினம் போல. அந்தளவுக்கு சைக்கிளை வாங்கவும், திருத்தவும் சனம் அலைமோதுது.**

**ஒரு இருபது வருசமா றோட்டில எப்பவாவது ஒண்டிரண்டு சைக்கிளைத்தான் காணலாம். மிச்சமெல்லாம் மோட்டர் சைக்கிளும், காரும் தான். ஆனால் இப்ப எல்லா இடமும் சைக்கிள்தான். மோட்டர் சைக்கிளைக் காணுறதே அரிதா மாறிப்போட்டுது. பெற்றோல் தட்டுப்பாடு, விலையேற்றம், பெற்றோல் வாங்க லைன்ல நாலைஞ்சு நாளா காயவேணும் எண்ட காரணத்துக்காக எல்லாரும் மோட்டர் சைக்கிளை விட்டிட்டு சைக்கிளுக்கு மாறிக் கொண்டிருக்கினம். இப்பிடி மாறுறதும், தீமையில ஒரு நன்மைதான். சுற்றுச்சூழலுக்கும், உடல்நலத்துக்கும் , பொருளாதாரச் சிக்கனத்துக்கும் சைக்கிள் ஓடுறது நல்லதுதான். சண்டை முடியும்வரை, தமிழரைச் சுமந்து, எல்லா இடமும் கொண்டோடின புண்ணியமும் சைக்கிளுக்கு இருக்கெல்லோ.**

**இப்ப என்ன கதையெண்டால், எல்லாரும் மோட்டர் சைக்கிளில இருந்து சைக்கிளுக்கு மாறிவாற இந்தக் காலத்தில, இவ்வளவு நாளும் சைக்கிளில திரிஞ்ச சிலர் இப்ப மோட்டர் சைக்கிளில வேலைக்கு போய்வந்தால் அது பெரும் புதினமெல்லோ. அப்பிடி ஒரு சங்கதி, பெற்றோல் செற்றுகளில வேலை செய்யிறவையின்ர வாழ்க்கையில நடக்கத் தொடங்கியிருக்கு. சில பெற்றோல் செற்றுகளில வேலை செய்யிற பம்மர், செக்கியூரிட்டி கார்ட் எண்டு பெரும்பாலும் எல்லாரும் சைக்கிளிலதான் செற்றுக்கு வேலைக்கு வந்து போறவையாம். ஆனால் இப்ப அவை நாளுக்கு ஒரு மோட்டர் சைக்கிளில வருகினம். இப்பிடி அவை வாறதுக்கு ஒரு காரணம் இருக்கு. அவை கொண்டு வாறது அவையின்ர பைக் இல்லையாம். வேற ஆக்களின்ர பைக்கை வாங்கிக் கொண்டு வேலைக்கு வாற மாதிரி வந்தால், லைன்ல நிக்கிறவை எந்த எதிர்ப்பும் காட்ட ஏலாது. பிறகு சமயம் பார்த்து தாங்கள் கொண்டு வந்த பைக்குக்கு '.'.புல்லா' பெற்றோலை அடிச்சிட்டு, வேலை முடிஞ்சு போகேக்க அதைக் கொண்டு போய் உரிய ஆளிட்ட குடுக்கினம். இப்பிடி அடிச்சுக் குடுக்க கொமிசனா சிலபல ஆயிரம் ரூபாவை வாங்குகினம் எண்டும் கேள்வி. இந்த ரெக்னிக்கை முதல் பொலிஸ்காரர் தான் செய்தவை, இப்ப செற்றில வேலை செய்யிறவையும் போட்டிக்கு செய்யத் தொடங்கிட்டினம். சபாஷ், சரியான போட்டி!**



- பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 12 காரணங்களின் அடிப்படையில் பேருந்துக் கட்டணத்தில் திருத்தம்

கொழும்பு, ஜூலை 4

12 காரணிகளின் அடிப்படையில் பேருந்துக் கட்டணங்கள் திருத்தப்பட்டுள்ளன என்று தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு நான்கு சந்தர்ப்பங்களில் எரிபொருள் விலைகள் அதிகரித்ததன் காரணமாக தேசிய பேருந்துக் கட்டணக் கொள்கைக்குப் புறம்பாகப் பேருந்துக் கட்டணங்கள் திருத்தப்பட்டதாக தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டுள்ளது. டொலரின் பெறுமதி அதிகரிப்பு மற்றும் உதிரிப் பாகங்களின் விலை அதிகரிப்பு என்பன உட்பட கடந்த ஏப்ரலில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீடுகளின் அடிப்படையில் பேருந்துக் கட்டணங்கள் 35 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமான மிலன் மிராண்டா தெரிவித்தார். (ம)


## தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை விலங்குகளுக்கு உணவளிக்க 20 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

கொழும்பு, ஜூலை 4

தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் உள்ள விலங்கு களுக்கு தேவையான உணவைப் பெற்றுக் கொள்ள 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் 100 வகையான பாலூட்டிகள், 110 வகையான பறவையினங்கள், 65 வகையான மீன்கள், 34 வகையான ஊர்வன, 3 வகையான ஈரூடகவாழிகள், 30 வகையான பட்டாம்பூச்சிகள் மற்றும் 10 வகையான கடல்வாழ் உயிரினங்கள் உள்ளன. இவற்றுக்கு அடுத்த 5 மாதங்களுக்குத் தேவையான உணவைப் பெற்றுக்கொள்வ தற்காகவே 20 மில்லியன் ரூபா வரை நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ம)

# கொரோனா மீண்டும் நாட்டில் தீவிரமாகும்



### சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 4**

**நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்று பரவும் அபாயம் காணப்படுகின்றது. சமூகத் தொற்றாக இந்தப் பரவல் ஏற்படும் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.**

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 6 நாள்களில் 71 கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். 573 கொரோனாத் தொற்றாளர்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கொரோனாத் தொற்றுத் தீவிரமாவதற்கான ஏதுநிலைகள் காணப்படுகின்றன. எனவே இதுவரை நான்காவது தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்கள் அதைச் செலுத்திக்கொள்ள முன்வர வேண்டும் - என்றார். (ம-ய)

## தங்கத்தின் விலை மேலும் அதிகரிக்கும்

கொழும்பு, ஜூலை 4

உலக நாடுகளில் தங்கத்தின் வரி அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் தங்கத்தின் விலை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் கணித்துள்ளனர்.

கொரோனாக் காலத்தில் தடைப்பட்ட விழாக்கள், நிகழ்வுகள் அனைத்தும் தற்போது இடம்பெறுவதால் தங்கத்தின் விலை அதிகரிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் ரஷ்யா - உக்ரைன் இடையேயான பிரச்சினையானது சர்வதேச அளவில் பணவீக்கத்தைத் தூண்டலாம் எனவும், பணவீக்கத்துக்கு எதிராக தங்கம் விலை அதிகரிக்க வாய்ப்பாக அமையலாம் எனவும் கருதப்படுகின்றது. (ம-14,இ)

## பொருளாதார நெருக்கடியால் நகைகளை விற்கும் மக்கள்

கொழும்பு, ஜூலை 4

தங்க நகைகளை விற்பனை செய்வதற்காக வர்த்தக நிலையங்களுக்குச் செல்லும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று அகில இலங்கை நகை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் தங்களிடம் உள்ள தங்க நகைகளை விற்பனை செய்கின்றனர் என்று அந்த சங்கத்தின் தலைவர் ஏ.விஜயகுமார் குறிப்பிட்டார்.

புதிதாக தங்கத்தைக் கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கையும் 5 முதல் 10 சதவீதம் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளது. கட்டாயத் தேவைகளுக்காக மாத்திரமே தங்க நகைக் கொள்வனவில் மக்கள் ஈடுபடுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு, செட்டியார் தெருவில் இந்த வாரம் 24 கரட் ஒரு பவுண் தங்கம் ஒரு லட்சத்து 85 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 22 கரட் தங்கம் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

## ஏமாற்றி டீசல் நிரப்பிய முன்னாள் சிப்பாய் கைது

கொழும்பு, ஜூலை 4

கடற்படை சீருடையைப் பயன்படுத்தி 45 லீற்றர் டீசலைப் பெற்றுகொண்ட முன்னாள் கடற்படைச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கம்பளை மாவட்ட நீதிமன்றால் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

தற்பொழுது நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டால் பொதுமக்கள் நாள்கணக்கில் வரிசையில் காத்திருந்து எரிபொருளைப் பெற்று கொள்ளும் நிலை காணப்படுகிறது. இப்படியிருக்கையில், குறித்த சிப்பாய் சில தினங்களுக்கு முன்னர் கம்பளை- கண்டி வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்துக்கு கடற்படைச் சீருடையுடன் வந்து கடற் படைக்குச் சொந்தமான படகு ஒன்றுக்குத் தேவை எனத் தெரிவித்து பீப்பாய் ஒன்றில் 45 லீற்றர் டீசலைப் பெற்றுகொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர் கடற்படை ஒழுக்க விதிமுறைகளை மீறி தன் சொந்த தேவைக்காக சீருடையுடன் வந்து பெற்றோல் பெற்றுகொண்டமை தொடர்பாக தலாத்து ஓயா கடற்படை முகாம் பொறுப்பதிகாரி புவனேக ஆதித்ய விஜேவிக்கிரமவுக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து அவர் கம்பளை பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-இ)

## தங்கக்கட்டிகளுடன் இலங்கையர் கைது

கொழும்பு, ஜூலை 4

4 கோடி ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகளுடன் இலங்கையர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை டுபாயிலிருந்து வந்த விமானம் மூலமே குறித்த நபர் இலங்கை வந்துள்ளார். இவரிடம் சுங்க அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில் 16 தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறு கைப்பற்றப்பட்ட தங்கக் கட்டிகளின் பெறுமதி 4 கோடியே 72 லட்சத்து 11 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட நபரிடம் சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம)

## எரிபொருளுக்கு காத்திருந்து முல்லை மக்கள் ஏமாற்றம்!

முல்லைத்தீவு, ஜூலை 4

முல்லைத்தீவு நகர் மற்றும் முள்ளியவளைப் பகுதிகளிலுள்ள இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குக் கடந்த வெள்ளிக்கிழமை எரிபொருள் விநியோகிக்கப்படும் எனக் கிடைத்த தகவலையடுத்து பொது மக்கள் மற்றும் அரச அலுவலர்கள் நீண்டவரிசையில் காத்திருந்தனர். எனினும் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 13 கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படும் எனக் கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தினர் அறிவித்த நிலையில் நீண்ட வரிசையில் மாலை வரை காத்திருந்தவர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியுள்ளனர். (ச-19)

# உதிரிப்பாகங்கள் இல்லாததால் 500 பேருந்துகள் சேவை நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 4


பேருந்துகளின் உதிரிப்பாகங்கள் இல்லாததால் இலங்கைப் போக்குவரத்துக்குச் சபைக்குச் சொந்தமான 500 பேருந்துகள் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளன என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் பல பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையிலே பேருந்துகளின் உதிரிப்பாகங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனினும் இ.போ.ச.வின் ஏனைய பேருந்துகள் வழமைபோன்று சேவையில் ஈடுபடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிபொருள் தட்டுப்பாட்டால் தனியார் பேருந்துகளை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கைத் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14,இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் சிக்கலுக்கு 10 நாள்களுக்குள் தீர்வாம்!

## வாக்குறுதியளித்த ஜனாதிபதி சமாதானமான எம்.பிக்கள்



**கொழும்பு, ஜூலை 4**

**எரிபொருள் பிரச்சினைக்கு எதிர்வரும் 10 நாள்களுக்குள் தீர்வு எட்டப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்தில் இருந்து சுயாதீனமாகச் செயற்படும் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதியை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின்போது நாட்டில் தற்போது பெரும் பிரச்சினையாக மாறியிருக்கும் எரிபொருள், எரிவாயு உட்பட சமகால பிரச்சினைகள் தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பியுள்ளனர் என்று அறியமுடிகின்றது.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி எரிபொருள் பிரச்சினைக்கு இன்னும் 10 நாள்களில் தீர்வு வழங்கப்படும் என்று தெரிவித்தார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஏ-இ)

### இன்றுமுதல்

## தனியார் பேருந்துச் சேவை நாடு முழுவதும் முடங்கும்!

கொழும்பு, ஜூலை 4

நாடு முழுவதும் இன்று முதல் தனியார் பேருந்துச் சேவை முற்றாக முடங்கும் நிலையேற்பட்டுள்ளது என்று இலங்கைத் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

பொதுப் போக்குவரத்துச் சேவையை, தொடர்ந்து சீராகக் கொண்டுசெல்லும் நோக்கில் தனியார் பேருந்துகளுக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துச் சாலைகளில் எரிபொருளை வழங்குமாறு அரசாங்கம் இதற்கு முன்னர் அறிவுறுத்தியது. எனினும் இலங்கை போக்குவரத்துச் சபையின் சில பிரதேச பேருந்துச் சாலைகளில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் வழங்கப்படுவதோடு சில இடங்களில் எரிபொருள் வழங்க மறுக்கப்படுகின்றது. இதையடுத்தே தனியார் பேருந்துகள் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று கெமுனு விஜேரத்ன மேலும் தெரிவித்தார். (ம)

### மருத்துவமனைகளில்

## எரிபொருள் நெருக்கடியால் உணவு விநியோகம் பாதிப்பு!

கொழும்பு, ஜூலை 4

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கான உணவு விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய சில பிரதான மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய உணவுக்குப் பதிலாக, மாற்று உணவுகளை வழங்கும் நிலை உருவாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## எரிபொருள் தேவைப்படும் நிறுவனங்கள் டொலரில் கட்டணம் செலுத்தலாம்!!!

### அமைச்சர் காஞ்சன அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

எரிபொருள் தேவைப்படும் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்கள் எரிபொருளுக்கான கட்டணங்களை டொலர்களில் செலுத்தி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் ஒதுக்கீட்டை பெற்றுக்கொள்ள முடியும் என்று அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஒதுக்கீட்டை பெற்றுக்கொள்ள ஒரு மாதத்துக்கு முற்பணமாக செலுத்தவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளது. அதனடிப்படையில் 12ஆம் திகதி முதல் நாளாந்தம் அல்லது வாராந்த அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

## தாதியர்களின் விசேட விடுமுறை மறுக்கின்றன மருத்துவமனைகள்

### ஆளுநருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சில மருத்துவமனைகள் மறுப்பதாக வடக்கு மாகாண ஆளுநருக்கு, தாதியர் சங்கம் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தாதியர்களுக்கான விசேட விடுமுறை ஏனைய மாகாணங்களில் வழங்கப்படுகின்றது. வட மாகாணத்தில் சில மருத்துவமனைகளில் அவை வழங்கப்படுவதில்லை.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் கலந்துரையாடப்பட்டது. மருத்துவமனைமுகாமைத்துவத்துடன் கலந்துரையாடுமாறு அவர் பணித்தார். மருத்துவமனை முகாமைத்துவத்துடன் கலந்துரையாடியும் அவர்களின் விடுமுறைகளை வழங்க மறுக்கின்றனர். அதனால் ஆளுநருக்கு முறையிடப்படுவதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-20)

## கடன்களைத் திருப்பிச் செலுத்தும் திட்டத்தையேனும் முன்வைக்குக!

### எரிபொருள் நிறுவனங்கள் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 4

இலங்கைக்கு இதுவரை எரிபொருளை விநியோகித்து வந்த ஏழு விநியோகஸ்தர்களுக்கு செலுத்த வேண்டிய 655 மில்லியன் டொலர் நிலுவைப் பணத்தை செலுத்தும் விதம் தொடர்பான திட்டத்தை முன்வைக்கும்வரை எரிபொருள் விநியோகம் நடைபெறாது என அந்த விநியோகஸ்தர்கள் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளனர்.

655 மில்லியன் டொலர் நிலுவைப் பணத்தில் 300 மில்லியன் டொலர் போட்ரோ சைனா நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டியுள்ளது. இதுதவிர மேலும் ஆறு விநியோகஸ்தர்களுக்கு 355 மில்லியன் டொலர் நிலுவைப் பணத்தை செலுத்த [illegible] சிறிய தவணைப் பணத்தையேனும் செலுத்துவதாக அரசாங்கம் வாக்குறுதி வழங்கினால், எரிபொருள் விநியோகத்தை மீண்டும் ஆரம்பிக்கத் தயார் என்று மேற்படி சர்வதேச எரிபொருள் விநியோகஸ்தர்கள் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளனர்.

இதனிடையே வெளிநாட்டுக் கப்பல்கள் மற்றும் கைத்தொழில் நிறுவனங்களுக்கு டீசலை விநியோகிக்கும் ஆறு தனியார் நிறுவனங்களிடம் அவசரத் தேவைக்காக எரிபொருளைக் கொள்வனவு செய்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அரசாங்கத்தின் சிறப்பு அனுமதிப் பத்திரத்தின் கீழ் எரிபொருளை இறக்குமதி செய்யும் நிறுவனங்களான ஜோன் கீல்ஸ், ஹேலீஸ், இந்திய எண்ணெய் நிறுவனம், மெக்லரன்ஸ் நிறுவனம், சினோபெக் நிறுவனம், டெல்மேஜ் நிறுவனம் ஆகியன டீசலை இறக்குமதி செய்து வருகின்றன.

இந்த நிறுவனங்களின் களஞ்சியங்களில் சுமார் 15 ஆயிரம் மெற்றிக்தொன் டீசல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. துறைமுகங்களுக்கு வரும் கப்பல்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்கே இந்த நிறுவனங்கள் முன்னுரிமை வழங்குகின்றன. அத்துடன் டொலரைச் செலுத்தி எரிபொருளைக் கொள்வனவு செய்யும் தேசிய நிறுவனங்களுக்கும் இந்த நிறுவனங்கள் எரிபொருளை விநியோகித்து வருகின்றன.

இந்தநிலையில் அரசாங்கம் ஆரம்பக் கட்டமாக 11 மில்லியன் டொலரைச் செலுத்தி, இந்திய எண்ணெய் நிறுவனத்திடம் இருந்து 7 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் டீசலை கொள்வனவு செய்துள்ளது. (எ-இ)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 4

மல்லாகம் கோட்டைக்காடு அருள்மிகு சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தான வருடாந்த பெருந்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும், 15 ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (ஒ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டலஸின் தலைமையில் புது அரசியல் கூட்டணி

கொழும்பு, ஜுலை 4

**முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையில் புதிய அரசியல் கூட்டணியை அமைப்பதற்கு நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படும் உறுப்பினர்கள் முனைப்புக் காட்டியுள்ளனர் என்று லங்கா சமசமாஜக் கட்சியின் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூகக் கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள எந்தப் பிரச்சினைக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லை. கடந்த காலங்களைக் காட்டிலும் தற்போது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள். எரிபொருள் பற்றாக்குறை முழு நாட்டையும் நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது.

அரசியல் உறுதியற்ற தன்மைக்கு இதுவரை தீர்வு எட்டப்படவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணாமல் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வுகாண முடியாது என்பதை சகல அரசியல் தரப்பினரும் விளங்கிக்கொள்ள வேண்டும். சர்வகட்சிகளையும் ஒன்றிணைத்து இடைக்கால அரசாங்கத்தை அமைத்துப் பொதுத் தேர்தலுக்கு செல்வது தீர்வு என்று மகாநாயக்க தேரர்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஜனாதிபதி அக்கறை செலுத்தவில்லை.

சர்வகட்சி தலைமையிலான அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்பதே சகல தரப்பினரதும் எண்ணமாக உள்ளது.

முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையில் புதிய கூட்டணியை அமைக்க நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படும் தரப்பினர் அவதானம் செலுத்தியுள்ளார்கள் -என்றார். (ம)

# இராஜதந்திர கடவுச்சீட்டுக்கு முயற்சிக்கும் எம்.பிக்கள்!

கொழும்பு, ஜுலை 4

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தமது இராஜதந்திர கடவுச் சீட்டுகளைக் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மற்றும் நாடாளுமன்ற சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி இராஜதந்திர கடவுச்சீட்டு பெறும் நடவடிக்கையிலேயே அவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# மஹிந்த மரணிக்கும் வரையில் பட்டாசுடன் காத்திருக்கின்றனர்!

## முன்னாள் அமைச்சர் கவலை

கொழும்பு, ஜுலை 4

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மரணிக்கும் வரையில் சிலர் பட்டாசுகளுடன் காத்திருப்பது மிகவும் துர்ப்பாக்கிய நிலை என முன்னாள் அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரபாகரனை கொன்றபோது அன்று பாற்சோறு சமைத்து, வெடி கொளுத்தி கொண்டாடிய சிலர் இன்று மஹிந்த மரணிக்கும் வரையில் வெடி கொளுத்த காத்திருக்கும் துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது.

மஹிந்த ராஜபக்சவிடம் குறைகள் காணப்பட்டாலும், இந்த நாட்டின் தீர்மானமிக்க சேவைகளை ஆற்றிய வரலாற்று ஆளுமை, இவ்வாறான தலைவர் மரணிக்கும் வரையில் காத்திருப்பது மிகவும் துயரமான நிலைமை.

மனிதர்கள் அன்றி விலங்குகள் இறந்தாலும் கொண்டாடி மகிழும் பழக்கம் என்னிடமில்லை. பிரபாகரன் உயிரிழந்த தினத்தில் பலர் வெடி கொளுத்தி கொண்டாடிய போதிலும் நான் அவ்வாறு செய்யவில்லை. ஒருவரின் மரணத்தைக் கொண்டாடுவது நல்ல பண்பு கிடையாது -என்றார். (ம)

# ஜனாதிபதி கோத்தாபய உடன் விலக வேண்டும்!

## பெரமுன எம்.பி. டிலான் போர்க்கொடி

கொழும்பு, ஜுலை 4

அரச நிர்வாகத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தோல்வியடைந்துள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே ஜனாதிபதி பதவிவிலக வேண்டும். நாடாளுமன்றத்தின் ஊடாக பதில் ஜனாதிபதி ஒருவரை நியமிப்பதற்கான சாத்தியம் அதிகளவில் உள்ளது என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார நெருக்கடி இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல என பொதுஜன பெரமுனவின் ஒருசிலர் குறிப்பிடுவது ஏற்றுக்கொள்ளமுடியாது. வரலாற்றில் என்றுமில்லாத வகையில் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளமைக்கு தவறான பொருளாதார முகாமைத்துவம் பிரதான காரணியாகவுள்ளது.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்ததை தொடர்ந்து பொருளாதாரத்தை வழிநடத்தியவர்கள் பொறுப்பில் இருந்து விலகினார்கள்.

எனினும், தவறான முகாமைத்துவமே அனைத்து நெருக்கடிகளுக்கும் காரணம்.

செல்வந்த தரப்பினரை திருப்திப்படுத்தும் வகையில் வழங்கப்பட்ட வரிச்சலுகை அரச வருவாய் இழப்பைத் தீவிரப்படுத்தியது. பொருளாதார நெருக்கடி மிக மோசமான முறையில் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

நாட்டு மக்கள் அனைவரும் வர்க்க அடிப்படையில்லாத வகையில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைப் பதவியில் வைத்துக்கொண்டு எந்தப் பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியாது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சளவில் மாத்திரமே பிரச்சினைகளுக்கு தீர்வு கூறுகின்றார்.

சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வ கட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும் அல்லது பொதுத்தேர்தலை நடத்தி மக்கள் தமக்கான அரசாங்கத்தை தெரிவு செய்துகொள்ள வாய்ப்பு வழங்கவேண்டும் -என்றார். (ம)

# இளம் தலைமுறையினரின் எதிர்காலம் கேள்விக்குறி!

## பெரமுன எம்.பி. ஜகத் குமார தெரிவிப்பு



கொழும்பு, ஜுலை 4

இளம் தலைமுறையினரது எதிர்காலம் கேள்விகுறியாகியுள்ளது. மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரச தலைவர்கள் தோல்வியடைந்துள்ளதால் இனி அரச தலைவர்களுடனான குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளப் போவதில்லை என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

தலங்கம பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தால் நாடு தற்போது பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. தவறான பொருளாதார முகாமைத்துவம் பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அரசாங்கத்திடம் தொடர்ந்து வலியுறுத்தினோம். இருப்பினும் எமது கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படவில்லை. நாட்டில் அரசாங்கம் என்றொன்று உள்ளதா என மக்கள் கேள்வியெழுப்புகிறார்கள். எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கினோம். ஆனால், தற்போது அந்த நம்பிக்கையும் இல்லாமற் போயுள்ளது.

கடந்த அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகித்து நாட்டை நெருக்கடிக்குள்ளாக்கியவர்கள் தான் தற்போதைய அரசாங்கத்திலும் அமைச்சுப் பதவிகளை வகிக்கிறார்கள். மக்கள் எதிர்கொண்டுள்ள எந்தப் பிரச்சினைகளுக்கும் அரசாங்கம் தீர்வைப் பெற்றுக்கொடுக்கவில்லை - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கல்வியோடு விளையாடாதீர்!

ஜூலை 4 ஆம் திகதி முதல் ஜூலை 8 வரையான ஒருவார காலப்பகுதிக்கு நாட்டில் உள்ள சகல பாடசாலைகளையும் மூடும் முடிவை இலங்கை அரசாங்கம் எடுத்திருக்கிறது. கடந்த ஒருவார காலம் பாடசாலைகளுக்கு வருகை தந்த ஆசிரியர்கள், மாணவர்களின் எண்ணிக்கை, செயற்பாடு என்பவற்றைக் கருத்திற்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

நாட்டில் எரிபொருள் அத்தியாவசிய சேவையினருக்கு மட்டுமே வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்த கையோடே, சகல பாடசாலைகளையும் மூடும் முடிவை எடுத்திருக்க வேண்டும். ஏனெனில் மாணவர்களில் பெரும்பாலானோரும், ஆசிரியர்களும் எரிபொருள் இல்லாவிட்டால் பாடசாலைகளுக்குச் சென்றுவருவதென்பது மிகக்கடினமான விடயம். ஆனால் அரசாங்கம் அப்படிப் பாடசாலைகளை மூடாமல், மேல்மாகாணத்தில் உள்ள நகரப்பாடசாலைகளை மட்டும் மூடிவிட்டு, கிராமப்பகுதிப் பாடசாலைகள் இயங்குவது பற்றி அந்தந்த மாகாண, வலயப் பணிப்பாளர்களும், அதிபர்களும் முடிவெடுக்கலாம் என்று ஒரு குழப்பகரமான அறிவிப்பை விடுத்தது. அத்தோடு பாடசாலைக்கு சமுகமளிக்காத ஆசிரியர்களுக்கு, லீவு வழங்காமல், பணிக்கு வருகை தந்ததாகக் கணிக்கும் சலுகையும் வழங்கப்பட்டது. இதனால் எரிபொருள் கிடைக்காத, போக்குவரத்துச் சிக்கலுக்குள்ளான ஆசிரியர்களும், மாணவர்களும் பாடசாலைக்குச் செல்லாமல் விட்டதனால் பெரும்பாலான பாடசாலைகள் கண்துடைப்புக்காகவே இயங்கின. இதனாலேயே இப்போது சகல பாடசாலைகளையும் ஒருவாரத்துக்கு மூடும் முடிவை அரசாங்கம் எடுத்திருக்கிறது.

ஏற்கனவே இலங்கை ஒரு பிரகடனப்படுத்தப்படாத முடக்க நிலைக்குள் தான் இருக்கின்றது. இன்று மக்கள் வீடுகளில் இருப்பதை விடவும், அலுவலகங்களில் பணிபுரிவதை விடவும், பாடசாலைக்குச் செல்வதை விடவும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் குடியிருக்கத் தொடங்கிவிட்டனர். எப்போதும், எங்கேயும் அவர்களுக்கு எரிபொருளின் நினைப்பு மட்டுமே ஆக்கிரமித்துள்ளது. அந்தளவுக்கு எரிபொருள் தட்டுப்பாட்டால் ஒட்டுமொத்த இலங்கையரும் வர்க்க வேறுபாடின்றி, அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எரிபொருளை ஏற்றிய மூன்றுகப்பல்கள் இந்தமாதம் வருமெனக்கூறப்பட்டாலும், அதில் வரும் எரிபொருள் யானைப்பசிக்கு சோளப்பொரி போல, இலங்கை மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யபோதாது. எனவே எரிபொருளுக்கான தட்டுப்பாடு அடுத்த மாதம் வரை தொடரத்தான் போகின்றது. அதுவரை எரிபொருள் தட்டுப்பாட்டாலும், போக்குவரத்துக் கட்டண உயர்வாலும் நாடு சுயமுடக்கத்துக்குள் போவதைத் தவிர வேறுவழியில்லை.


ஆயினும் ஒரு கப்பலில் எரிபொருள் வந்தவுடனேயே , ஒட்டுமொத்தப் பிரச்சினைகளும் தீர்ந்துவிட்டதாக எண்ணி, இந்த அரசாங்கம் அடுத்தநொடியே சகல பணிகளும் வழமை போல நடக்க வேண்டும் என்றொரு வர்த்தமானியை விடக்கூடும். பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் முடுக்கப்பட்டும் பின்னர் அந்த எரிபொருள் அடுத்த சில நாள்களில் தீர்ந்தவுடன், மீண்டும் முடக்கநிலை உருவாகும். அப்போதும் மீண்டும் பாடசாலைகள் இழுத்து மூடப்படலாம். இப்படி தற்காலிகத் தீர்வுகளை நம்பி, நாட்டையும், மக்களையும், மாணவர்களின் கல்வியையும் குழப்பிக் கொண்டிராமல் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வைக் கண்டுபிடிக்க அரசாங்கம் முனையவேண்டும். குறைந்த பட்சம், வெளிமாவட்டங்களில் அல்லது தூரப்பிரதேசங்களில் பணியாற்றும் ஆசிரியர்களை அவர்களுக்கு மிகக் கிட்டவாக உள்ள பாடசாலைகளில் இணைக்கும் முடிவை சரிவர நிறைவேற்றினாலேயே , ஏறக்குறைய ஆசிரியர்கள் எரிபொருள் பிரச்சினை இருந்தாலும் பாடசாலைக்கு வருவதை உறுதிப்படுத்த முடியும். அதேபோல மாணவர்களை அருகில் உள்ள பாடசாலைகளில் இணைப்பதில் இடவசதி, பாடத்தெரிவுகள், பாடசாலையின் நற்பெயர் போன்ற சில நடைமுறைச்சிக்கல்கள் இருப்பின், மாணவர்களுக்கு மட்டுமான பொதுப்போக்குவரத்துக்கு எரிபொருளைச் சீராக வழங்க நடவடிக்கை எடுத்தால் அவர்களும் பாடசாலைக்கு வழமைபோல சமுகமளிக்கும் நிலை உருவாகும்.

ஏற்கனவே கொரோனாவால் மிகநீண்டகாலம் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் இழக்கப்பட்ட நிலையில், இப்போது எரிபொருள் பிரச்சினையிலும் அவர்களின் கல்வியைப் பலியிடக்கூடாது. எனவே சுகாதாரத்துறை போல, கல்வித்துறைக்கும் அத்தியாவசிய இடம் கொடுத்து, ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் வருகைக்கான உரிய– பொருத்தமான– நடவடிக்கைகளை எடுத்து பாடசாலைகளை இயங்கவைக்க வேண்டும். மாறாக [illegible] அடிக்கடி பாடசாலைகளை மூடுவதும், திறப்பதுமாக [illegible]ந்தால் அது பாதகமான பின்விளைவுகளையே ஏற்படுத்தும். ஏனைய அரச அலுவலங்கள் முடங்கினாலும், அவற்றைப் பின்னர் ஏதோவொருவகையில் ஈடு செய்ய முடியும். ஆனால் கல்வி அப்படியல்ல, அது பருவத்தே பயிர் செய்யத் தவறின் எல்லாவற்றையும்– நாட்டின் எதிர்காலத்தையும்– பாழாக்கி விடும்.

### நாளொரு நல்வார்த்தை

சட்டங்கள் இல்லாவிடில் நாம் ஒருவரை ஒருவர் விழுங்கி ஏப்பம் விட்டு விடுவோம்.

- ஜஸ்டின்





# நாளாந்த விலைத் தளம்பல் பொருள்கள் சேமிப்பில்லை

## கூட்டுறவுச் சங்கங்கள் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 4**

**கூட்டுறவுச் சங்கங்களில் அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்து போதியளவில் களஞ்சியப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.**



தற்போதைய பொருளாதார நெருக்கடியில் அத்தியாவசியப் பொருள்களின் விலை நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்றது.

உள்ளூர் கொள்வனவில் ஏற்பட்டுள்ள இந்த நாளாந்த விலைத் தளம்பலே இதற்குக் காரணமாகும். இதன்காரண மாக அநேகமான சங்கங்கள் உள்ளூர் பொருள்களின் கொள்வனவில் சிரமங்களை எதிர்நோக்குகின்றன.

அத்துடன் அதிக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் போதியளவு பொருள்களைக் கையிருப்பில் வைக்க முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது எனவும் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-17)

### எரிபொருள் இல்லாமையால்

# தனியார் மருந்தகங்களுக்கான மருந்து விநியோகம் நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 4

எரிபொருள் தட்டுப்பாட்டால், நாடு முழுவதும் உள்ள தனியார் மருந்தகங்களுக்கு மருந்து விநியோகம் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என அகில இலங்கை மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சந்திக்க கன்கந்த தெரிவித்துள்ளார்.

மருந்து விநியோகத்துக்கு முக்கியத்துவம் வழங்க அதிகாரிகள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இதேவேளை- இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மருந்துகளை இறக்குமதி செய்யமுடியாமல் போயுள்ளது. அத்துடன் அரச மருத்துவமனைகளிலும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால், நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதாரத் துறையினர் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ய-இ)

நாளை

05.07.2022 செவ்வாய்க்கிழமை ஆனி 21

சுபநேரம் : 10.27 – 11.57
ராகுகாலம்: 02.57 – 04.27

குமாரஷஷ்டி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வம்பு வழக்குகள் இன்று ஏற்படலாம். பிறரது பிரச்சினைகளில் தலையிடாதீர்கள். கடுமையான முயற்சிக்குப் பின் உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். நிதானமாகச் செயற்படுங்கள். பிரச்சினைகளை சமாளிப்பீர்கள்.

**இடபம்:** அறிவுப்பூர்வமாக செயற்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். துணிச்சலுடன் செயற்பட்டு நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பகைவர்கள் விலகிச் செல்வார்கள்.

**மிதுனம்:** பேச்சில் கவனம் தேவை. நிதானமாக செயற்படுவதால் நன்மைகள் அதிகரிக்கும். பிறரது செயற்பாடு உங்களுக்கு எரிச்சலை உண்டாக்கும். அமைதி காப்பது நல்லது.

**கடகம்:** வேலைப்பளுவால் மனக்குழப்பம் அதிகரிக்கும். செயல்களில் கவனம் தேவை. மகிழ்ச்சியை நோக்கி மனம் செல்லும். உங்களுக்கேற்ப செயல்களை மாற்றிக் கொள்வீர்கள். நன்மையான நாள்.

**சிம்மம்:** வீட்டில் உள்ள பழுதுகளை சரி செய்வீர்கள். செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தினருக்காக புதிய பொருள்களைவாங்குவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். உங்களது செல்வாக்கு உயரும்.

**கன்னி:** வருவாய்க்காக நீங்கள் மேற்கொண்ட முயற்சி வெற்றியாகும். கடன்களை அடைப்பீர்கள். புதிய முயற்சி ஒன்றை மேற்கொள்வீர்கள். நிதி நிலை உயரும். சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**துலாம்:** தொழிலில் இருக்கும் தடைகளை சரிசெய்ய முயற்சி செய்வீர்கள். வேலைக்காக நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி இழுபறியாகும். குலதெய்வ வழிபாடு நன்மை தரும். தொழிலில் போட்டியும், எதிர்ப்புகளும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** தந்தைவழி உறவுகளால் உங்களது செயல்களில் சாதகமான நிலை உண்டாகும். முன்னோர்களின் அருளினால் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிக்குரிய அறிகுறி உண்டாகும். எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள்.

**தனுசு:** வெளியூர் பயணத்தால் சில சங்கடங்கள் உண்டாகும். நிதானமாக செயற்படுங்கள். சங்கடமான சூழ்நிலை உண்டாகும். அதை சாமர்த்தியமாக எதிர்கொள்வீர்கள். எதிர்பார்த்த வருமானத்தில் தடை உண்டாகும்.

**மகரம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நீங்கள் விரும்பியதை அடைந்து மகிழ்வீர்கள். நண்பர்களால் உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். மனதிற்கினிய சம்பவம் நடந்தேறும்.

**கும்பம்:** சண்டை சச்சரவு என்று விலகிச் சென்றவர்கள் உங்கள் வீடு தேடி வருவார்கள். தைரியமாக செயற்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். மனம் மகிழும் நாள். தொல்லை கொடுத்தவர்கள் விலகிச் செல்வார்கள்.

**மீனம்:** பிள்ளைகள் குறித்த கவலைகள் வந்து செல்லும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். குடும்ப நன்மைக்காக கோயில் பயணம் மேற்கொள்ள திட்டமிடுவீர்கள். நீண்டநாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். உங்கள் செல்வாக்கு உயரும்.

# சீனாவுடன் இணைந்த பின்பே ஹொங்கொங்கில் ஜனநாயகம்

## ஜி ஜின்பிங் சர்ச்சைப் பேச்சு

**பிஜிங், ஜூலை 4**

**சீனாவுடன் மீண்டும் இணைந்த பிறகுதான் ஹொங்கொங்குக்கு உண்மையான ஜனநாயகம் தொடங்கியது. ஹொங்கொங் என்றுமே என் மனதில் இருக்கும். தங்கள் தாய் நாட்டுடன் ஹொங்கொங் இணைந்த பிறகு ஹொங்கொங் மக்கள் தலைவர்களாகிவிட்டார்கள் என்று சீன அதிபர் ஜி ஜின்பிங் தெரிவித்தார்.**

சீனாவுடன், ஹொங்கொங் இணைந்து 25 ஆண்டுகள் முடிவடைவதை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பிரமாண்ட விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பல குழப்பங்களுக்கும் பிறகும் ஹொங்கொங்கை கீழே விழவைக்க முடியாது என்பதை சிலர் வலியுடன் புரிந்துகொண்டிருக்கிறார்கள். நான் ஹொங்கொங்கின் வளர்ச்சியிலேயே நோக்கம் கொண்டுள்ளேன். ஹொங்கொங் பல சவால்களையும் மீறி உயிர் பெற்றுள்ளது' என்று ஜின்பிங் மேலும் தெரிவித்தார்.

சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது ஹொங்கொங். எனினும் தன்னாட்சி அதிகாரம் பெற்றதாகவே ஹொங்கொங் உள்ளது. இந்த நிலையில், ஹொங்கொங்கில் குற்றவியல் வழக்குகளில் சிக்குபவர்களை சீனாவுக்கு நாடு கடத்தி, வழக்கு விசாரணையைச் சந்திக்க வைக்க, கைதிகள் பரிமாற்றச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர ஹொங்கொங் நிர்வாகம் முடிவு செய்தது. சீனாவின் நெருக்கடியால் இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வரப்படுவதாக லட்சக்கணக்கான ஹொங்கொங் மக்கள் பல மாதங்கள் போராட்டம் நடத்தினர்.

இந்தப் போராட்டத்தை ஒடுக்க சீனா தனது படையை ஹொங்கொங்கில் களமிறக்கியது.

இதையடுத்து ஹொங்கொங் அரசியலில் சீனா தலையிடுவதை நிறுத்த வேண்டும் என தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படியொரு பின்னணியிலேயே இந்த விழா பெரும் எடுப்பில் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# முதலையை கரம்பிடித்த மெக்ஸிக்கோ மேயர்



மெக்ஸிக்கோ, ஜூலை 4

மெக்ஸிகோ நாட்டின் தென்மேற்குப் பகுதியிலுள்ள பெட்ரோ ஹவுமெலுலா நகரின் மேயர் ஒருவர் முதலை ஒன்றை திருமணம் செய்துள்ளார்.

இயற்கை வளத்துடன் ஒன்றிக்கும்படியான பழங்கால சடங்கு முறைப்படி பெண் முதலை ஒன்றை அவர் திருமணம் செய்துள்ளார்.

கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்ற இந்தத் திருவிழா நிகழ்வில் முதலைக்கு வெள்ளை நில ஆடை அணிவிக்கப்பட்டு பாதுகாப்புக்காக அதன் வாயை கட்டி நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பில் மேயர் தெரிவிக்கையில்,

"இயற்கையிடம் மழை, உணவு, மீன் வளம் வேண்டி இந்த திருமண நிகழ்வு இடம்பெற்றுள்ளது. இந்த திருமணச் சடங்கு பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய ஹிஸ்பானிக் காலத்தைச் சேர்ந்த ஒக்ஸாகா மற்றும் ஹுவேவ் பழங்குடி சமூகங்களில் பின்பற்றப்பட்டு வந்தது.

இயற்கையின் கருணையை வேண்டி இம்மாதிரியான சடங்குகள் நிறைவேற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது"- என்றார். (ச-இ)

# பிறநாடுகளிலும் அமெ.பெண்கள் கருக்கலைப்பு செய்ய முடியாது

## ஜோ பைடன் அறிவிப்பு

வொஷிங்டன், ஜூலை 4

பிறநாடுகளுக்குச் சென்று கருக்கலைப்பு செய்துகொள்ளும் அமெரிக்கப் பெண்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளது என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் கருக்கலைப்பு பெண்களின் தனிப்பட்ட உரிமை என 50 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த கருக்கலைப்பு சட்ட உரிமையை நீக்கி கடந்த 24 ஆம் திகதி உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

அதையடுத்து அங்குள்ள 13 மாகாணங்கள் கருக்கலைப்பு தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தின. அத்துடன் ஏனைய மாகாணங்கள் கருக்கலைப்புக்கு தடைவிதித்தல் அல்லது கருக்கலைப்புக்கான விதிகளை கடுமையாக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக தகவல்கள் வெளியாகின.

கருக்கலைப்புச் சட்டத் தடைக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கடுமையான விமர்சனம் முன்வைத்தார். இந்தநிலையில் பிறநாடுகளுக்குச் சென்று கருக்கலைப்புசெய்துக்கொள்ளும் அமெரிக்க பெண்கள் மீது கைது நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளது என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார். (ச-இ)

# உக்ரைன் பாம்புத் தீவில் ரஷ்யா குண்டுமழை

கீவ், ஜூலை 4

உக்ரைனின் பாம்புத் தீவு மீது ரஷ்யா விமானங்கள் சரமாரியாகக் குண்டுமழை பொழிந்தன என அங்கிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து 5 மாதங்களைக் கடந்துள்ளது.

தற்போது கிழக்கு உக்ரைன் பகுதியில் ரஷ்யப் படைகள் கடுமையாகத் தாக்குதலை நடத்தி வருகின்றன.

இந்தநிலையில் கருங்கடல் பகுதியில் உக்ரைனின் பாம்புத் தீவை ரஷ்யப் படைகள் அண்மையில் கைப்பற்றின. அந்தத் தீவை மீட்க உக்ரைன் இராணுவத்தினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் பாம்புத் தீவு மீது நேற்று ரஷ்யப் போர் விமானங்கள் சரமாரியாகக் குண்டுகளை வீசின எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



எகிப்து நா[illegible] தீவு ஒன்றின் கடற்கரையில் அதிசய உருவ[illegible] கொண்ட விலங்கு ஒன்று இறந்த நிலையில் க[illegible]ண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ஏலியன் சாயலை ஒத்ததாகவும் இதற்கு கண்கள் காணப்படவில்லை எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திறன் வகுப்பறைகள் மற்றும் மதில் தொகுதி திறப்பு விழா

முல்லைத்தீவு, ஜூலை 4

முல்லைத்தீவு, அனிஞ்சியன்குளம் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் ஏழு திறன் வகுப்பறைகள் மற்றும் மதில் தொகுதி திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் த.நிமலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினராக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் மாலதி முகுந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம-14,159)

### குடமுருட்டி குளத்தின் கீழான

# நெற்செய்கையில் விளைச்சல் குறைவு

## விவசாயிகள் கவலை



**கிளிநொச்சி, ஜூலை 4**

**பூநகரி, குடமுருட்டி குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையில் இந்த முறை விளைச்சல் பெருமளவில் குறைவடைந்துள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

குடமுருட்டி குளத்தின் கீழ் 336 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது அதன் அறுவடை ஆரம்பித்த நிலையில் கடந்த கால போகத்தைவிட இந்தப் போகத்தில் விளைச்சல் குறைந்துள்ளது.

ஒரு ஏக்கர் அறுவடை செய்வதற்கு தற்போது 25 ஆயிரம் ரூபா செலவாகின்றது. இந்த நிலையில் ஒரு மூடை நெல்லை 8 ஆயிரம் ரூபாவுக்கு கேட்கின்றனர். இதனால் எமக்கு இலாபம் வராது. அவ்வாறிருக்க அறுவடை செய்கின்ற நெல் எமது உணவுத் தேவைக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது.

ஒரு ஏக்கருக்கு 35 மூடைகள் பெறும் நிலத்தில் 22 மூடைகளும் சில வயல் நிலங்களில் கிடைப்பது அரிதாகக் காணப்படுகின்றது - என்றனர். (ம-14,113)



## மருதனார்மடத்தில் நீச்சல் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 4

அகில இலங்கை பாடசாலை நீச்சல் சம்மேளனத்தின் அனுசரணையுடன் மருதனார்மடத்தில் நீச்சல் பயிற்சி முகாமொன்று கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பயிற்சி முகாமில் இலங்கை உயிர்காப்பு செயற்றிட்டத்தின் தலைவர் அசங்க நாணயக்கார கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார்.

வெள்ள இடர்கள் ஏற்படுகின்றபோதும் நீராபத்துக்களின்போதும் தம்மையும் பிறரையும் காப்பாற்றுவதை நோக்காகக் கொண்டு இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு பயிற்சியின் நிறைவில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ம-14,125)

## திறன் வகுப்பறைகள் மற்றும் மதில் தொகுதி திறப்பு விழா

முல்லைத்தீவு, ஜூலை 4

முல்லைத்தீவு, அனிஞ்சியன்குளம் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் ஏழு திறன் வகுப்பறைகள் மற்றும் மதில் தொகுதி திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் த.நிமலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மாலதி முகுந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம-14,159)

## கிளிநொச்சி மாவட்டத்தில் உணவு பாதுகாப்புத் திட்டம்

### பிரதேச சபைகளுக்கு நிதியொதுக்கீடு

கிளிநொச்சி, ஜூலை 4

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைத் தணிக்கும் முகமாக கிளிநொச்சி மாவட்ட பிரதேசசபைகளால் முன்னெடுக்கப்படவுள்ள உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்துக்கு யு.என்.டி.பி. நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேசசபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது பூநகரி பிரதேச சபைக்கு 9 லட்சம் ரூபாவும் பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைக்கு 8 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் கரைச்சிப் பிரதேசசபைக்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா எனக் காசோலைகள் வழங்கப்பட்டன.

குறித்த நிதி பிரதேச மக்களின் வீட்டுத்தோட்டம், கோழிவளர்ப்பு எனப் பல்வேறு செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

நிகழ்வில் உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிரஞ்சன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் மற்றும் அந்தந்தப் பிரதேசசபைகளின் தவிசாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-13)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

மாதகல் - பாணாகவெட்டி புவனேஸ்வரி அம்பாள் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 7.10 மணி முதல் 8.10 மணிவரையுள்ள சுபவேளையில் அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும். (ய)



## உயிரிழந்த நிலையில் 20 அடி நீள சுறா மீட்பு

முல்லைத்தீவு, ஜூலை 4

முல்லைத்தீவு, அலம்பில் கடற்கரையில் உயிரிழந்த நிலையில் சுமார் 20 அடி நீளம் கொண்ட புள்ளிச்சுறா ஒன்று கடந்த வெள்ளி கரையொதுங்கியுள்ளது.

முல்லைத்தீவு கடலில் இந்திய இழுவைப்படகுகள் அண்மை நாள்களாக சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

இதனால் கடல்வாழ் உயிரினங்கள் அழிக்கப்படுவதாக மீனவர்கள் கவலை தெரிவித்து வந்தனர். இந்த நிலையில் கரையொதுங்கிய சுறா மீனும் இந்திய மீனவர்களின் இழுவைப்படகின் தாக்கத்துக்குள்ளாகி இருக்கலாம் என்று முல்லை மீனவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம-14,19)



கைதடி குருசாமி வித்தியாலய பரிசளிப்பு விழா பாடசாலை பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி தாபன மற்றும் பொது முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.அபிராமி, சிறப்பு விருந்தினராக மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் ஆசிரியர் மதிலோஜினி லோகீசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-14,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சைக்கிளின் மவுசு













# மன்.றோட்டரிக் கழகத்துக்கு புதிய தலைவர் நியமனம்



மன்னார், ஜுலை 4
மன்னார் றோட்டரிக் கழகத்தின் புதிய தலைவராக றொபின் ஜெயரூபன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
கடந்த மாதம் 30ஆம் திகதி நடைபெற்ற றோட்டரிக் கழகத்தின் புதிய நிர்வாகத் தெரிவின்போதே அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
மன்னார் றோட்டரிக் கழகம் மன்னார் மாவட்டத்தில் கல்வி, மருத்துவம் போன்றவற்றுக்கு நிவாரணப் பணி உள்ளிட்ட பல்வேறு உதவிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-213)



மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நிர்வாக அலகு கட்டடம் அண்மையில் திறக்கப் பட்டது. கல்லூரி தேசியப் பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர் கல்லூரியின் பழைய மாணவர்கள் வழங்கிய 4 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-14,9)

# குடாநாட்டில் விபத்துக்கள் கணிசமாகக் குறைவடைவு

யாழ்ப்பாணம், ஜுலை 4
எரிபொருள் தட்டுப்பட்டால் குடாநாட்டுப் பகுதிகளில் வாகன விபத்துக்கள் குறைவடைந்துள்ளன என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.
நாட்டில் எரிபொருள் தட்டுப்பாட்டால் குடாநாட்டு வீதிகளில் நாளுக்குநாள் வாகனப் போக்குவரத்து வெகுவாகக் குறைவடைந்துள்ளன.எஇதனால் யாழ்.போதனா மருத்துவமனையின் விபத்துப் பிரிவில் சேர்க்கப்படும் நோயாளர்கள் எண்ணிக்கையும் கணிசமாகக் குறைவடைந்துள்ளது என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

# யானையுடன் மோதி விபத்து; மூவர் மருத்துவமனையில்

கொழும்பு, ஜுலை 4
அநுராதபுரம் பகுதியில் சிங்கள நடிகர் உள்ளிட்ட மூவர் பயணித்த வாகனம் யானையுடன் மோதியதில் விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது காயமடைந்த மூவரும் சிகிச்சைகளுக்காக அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச-இ)

# சித்தன்கேணியிலிருந்து திருக்கேதீச்சர உற்சவத்துக்கு ஆன்மிக சைக்கிள் பயணம்

யாழ்ப்பாணம், ஜுலை 4
வரலாற்றுப் பிரசித்திபெற்ற மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தின் கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு சுழிபுரத்தைச் சேர்ந்த ஒருவர் சைக்கிளில் ஆன்மிகப் பயணம் மேற்கொண்டுள்ளார்.
ஓய்வுபெற்ற கூட்டுறவு உத்தியோகத்தரான சைக்கிள் ஓட்டவீரர் வை.கைலைநாதன் என்பவரே நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு சித்தங்கேணி சிவன் கோவிலில் இருந்து ஆன்மிகப் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.
இதேவேளை- இவர் அண்மையில் நடைபெற்ற முல்லைத்தீவு- வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயப் பொங்கல் உற்சவத்துக்கும் ஆன்மிக சைக்கிள் பயணம் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-17)

ஆசிரியருக்கான கடிதம்

# பேருந்துகளை ஒலி எழுப்பி சேவையில் ஈடுபடுத்துங்கள்

எமது நாட்டில் அனைத்துத்துறைகளும் ஒருவித குழப்பான நிலையை அடைந்துள்ளன. அதிலும் போக்குவரத்துத்துறை கண்டுள்ள பின்னடைவு சொல்லிமாளாதது.
கிட்டத்தட்ட முடக்க நிலையை அரச, தனியார் போக்குவரத்துத் துறைகள் அடைந்துள்ளன. எப்போது பேருந்துகள் சேவையில் ஈடுபடும் என்பது முன்பு போல் கணிக்கக்கூடியதாக இல்லை. திட்டமிடப்படாத நேரத்தில் பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக உள்ளது.
இதனால் பொதுமக்கள் வீதிகளில் தத்தமது வீடுகளுக்கு முன்னால் மணிக்கணக்கில் பேருந்துகளுக்காகக் காத்துக்கிடக்கின்றனர்.
ஆகவே பேருந்துச் சேவையில் ஈடுபடும் சாரதிகள் அனைவருக்கும் ஓர் அன்பான வேண்டுகோள் என்னவென்றால், பேருந்துகளை நீங்கள் செலுத்தும் போது அடிக்கடி ஒலி எழுப்பிச் சேவையில் ஈடுபட்டால் பேருந்துகள் வருவதை மக்கள் சிரமமின்றி அறிந்து கொள்வார்கள். இதனால், அவர்கள் மணிக்கணக்கில் வீதிகளில் காத்திருக்கும் அவலமும் ஓரளவேனும் குறைவடையும். அல்லாவிடின், ஏதாவது பொருத்தமான பொறிமுறையொன்றை அதிகாரிகள் தெரிந்தெடுக்க வேண்டும்.

சி.ஶ்ரீஜீவா, வலி.மேற்குப்பிரதேச சபை உறுப்பினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எமனின் வாழிடம் யேமன்



■ ஆர்.பிரகாஸ்

மனிதப் பேரவலங்கள் மத்திய கிழக்குக்குப் புதிதல்ல. கடந்த பல தசாப்தங்களாகவே உள்நாட்டுப் போர்களும், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளும் சூழ்ந்துவிட்ட தேசமாக மத்திய கிழக்கு மாறிவிட்டது. குண்டுவெடிப்பு, தாக்குதல், கொலை, கடத்தல், வன்புணர்வு, பொருளாதாரத் தடை போன்ற பிற்போக்கான சொற்பதங்கள் மத்திய கிழக்கு கேட்டுக்கேட்டுப் புளித்துப்போனவைதான். எனினும் உள்ள சோகங்களில் உச்ச சோகமாக உள்ளது யேமன்.

**நானா நீயா?**

யேமனில் முஸ்லிம்களின் இரு இனக் குழுமங்கள் ஒன்றையொன்று இனச் சுத்திகரிப்புச் செய்யும் அளவுக்குப் பகையை வளர்த்து மனிதத்தை மறந்து நிற்கின்றன. ஒன்று ஷியா. இன்னொன்று சன்னி. ஏமன் ஆட்சியாளர்கள் சன்னிப் பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு எதிராக ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுதி ஆயுதக் குழு போரிட்டு வருகிறது. ஆட்சியாளர்களைப் பதவியில் இருந்து அகற்ற வேண்டும், தலைநகர் சனாவில் கொடியேற்றவேண்டும் இவைதாம் ஹவுதியின் நோக்கம். 2015 ஆம் ஆண்டு முதல் இந்த இருதரப்பு மோதல் வலுத்துள்ளது. யேமனுக்கு ஆதரவாக சவூதியின் தலைமையில் கூட்டுப்படை போரிட்டுக் கொண்டிருக்கின்றது. ஹவுதியும் தனித்தில்லை. அதற்கு ஈரானின் வெளிப்படை ஆதரவும் ஆயுத உதவிகளும் உள்ளன. இந்த உள்நாட்டுப் போரால் இதுவரை சுமார் ஒரு லட்சத்து 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்துள்ளன. அவற்றில் பாதிக்கும் மேற்பட்ட குழந்தைகள் பட்டினிச் சாவை எதிர்கொண்டு இறந்தவை. சுமார் இரண்டு லட்சம் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மில்லியன் கணக்கானவர்கள் அகதிகளாக ஆகியுள்ளனர்.



இதைவிட சுமார் 50 லட்சம் குழந்தைகள் தற்போது பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளனர் என்று ஐ.நா. எச்சரித்துள்ளது.

போர், போரின் இலவச இணைப்புக்களான நோய்கள், பொருளாதாரப் பின்னடைவு, விவசாய வீழ்ச்சி இவை அனைத்தும் ஒருமிக்க இணைந்து யேமனில் தற்போது 'பஞ்சம்' என்றும் மிகப்பெரும் பேரழிவு எச்சரிக்கையை கடந்த வாரம் ஐ.நா. எழுப்பக் காரணமாகியிருக்கின்றன. இப்படியே சென்றால் யேமனுக்கு குறிப்பாக யேமன் குழந்தைகளுக்கு எதிர்காலம் என்ற ஒன்று இருக்கப்போவதில்லை என்று எச்சரித்துள்ளது 'சேவ் த சில்றன்' அமைப்பு. ஆக, யேமனின் நிலைமை தீவிரமானது. ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிர அமைப்பு நிலைகொண்டிருந்த சிரியா, ஈராக் நாடுகளைவிடவும் மேலான அழிவை அது எதிர்கொண்டுள்ளது. இதை 'இன்னும் தீவிர அழிவு' என்று விழித்தாலும் அதில் இரண்டாம் கருத்தில்லை, ஆச்சரியப்படுவதற்கும் எதுவும் இல்லை.

**யேமன் ஏன் இலக்கானது?**

யேமனின் துயரத்துக்குக் காரணம் மத்திய கிழக்கின் அதிகாரப் போட்டியும் அதற்கு உகந்த அதன் அமைவிடம் என்பதும் தவிர்க்க முடியாததாகின்றது. உள்நாட்டுப் போர் நீட்சி பெறுவதற்கும் இதுவேதான் முழுமுதல் காரணம்.

யேமன் சவூதிக்கு அருகில் அமைவு பெற்றுள்ளது.

உலக அளவில் அதிக கச்சாய் எண்ணெயை ஏற்றுமதி செய்யும் சவூதி ஈரானின் பரம எதிரி.

சவூதிக்கு இன்னொரு அயல் நாடு ஈராக். ஈராக்குக்கு அருகில்தான் ஈரான் உள்ளது.

ஆக, போர்ப்பதற்றம் ஏதும் ஏற்பட்டு ஈரான் சவூதியைத் தாக்க வேண்டுமாயின் ஈராக்கைத் தாண்டிதான் அதைச் செய்யவேண்டும், இது சாத்தியமற்றது.

இதனால் சவூதிக்கு அருகில் உள்ள யேமனில் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்த எண்ணிய ஈரான் யேமனுக்கு எதிராகவும் சவூதிக்கு எதிராகவும் ஹவுதியை வளர்த்தது.

தற்போது சவூதிக்கு எதிரான பெரும் பிடிமானமொன்று யேமனில் ஈரானுக்கு உள்ளது. சவூதியின் பெருமளவான எண்ணெய்க் குதங்கள் யேமனுக்கு அருகாகத்தான் அமைந்துள்ளன. அதாவது ஹவுதியால் தாக்கக் கூடிய தூரத்தில் அவை உள்ளன. இதனால்தான் எந்த அச்சுறுத்தல் வந்தாலும் ஈரானை நோக்கி விரல் நீட்டுவதற்கு சவூதி தற்போதெல்லாம் தயங்குகின்றது.

அண்மையில் ஈரானைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டிருந்தபோது, ஈரானில் இருந்து எந்தநாடும் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்யக்கூடாது என்று பகிரங்க மிரட்டல் விடுத்திருந்தது.

இதற்குப் பதிலடியாக சவூதியில் மிகப்பெரும் எண்ணெய் கிணறுகள் மீது ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஈரானில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைகள் ஹவுதியால் ஏவப்பட்டமை பின்பு ஆய்வுகள் மூலம் தெரியவந்தது.

இது யேமனில் ஈரான் தன்னை எந்தளவுக்குப் பலப்படுத்திக்கொண்டது என்பதை தெட்டத்தெளிவாகப் பறைசாற்றுகின்றது. இதனால்தான் இதுகாலும் யேமனில் இடம்பெற்றுவரும் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வரவேயில்லை.

யேமனில் இடம்பெறும் உள்நாட்டுப் போர் ஷியா, சன்னி இனப் பிரிவுகளுக்கு உட்பட்டது என்பது வெளிப்படையான தோற்றப்பட்டாக இருந்தாலும் சர்வதேச சமூகத்தால் யேமனும், ஹவுதியும் பகடைக்காய்கள் ஆக்கப்பட்டுள்ளமையே நிதர்சனம்.

இந்தப் பகடையாட்டம் நீங்கும்வரையில் யேமன் எமனின் வாழிடமாகவே இருக்கும். ■

# இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக வெளிநாடு செல்லமுற்பட்ட 51 பேர் கைது

கொழும்பு, ஜூலை 4

இலங்கையிலிருந்து சட்டவிரோதமான முறையில் கடல்மார்க்கமாக வெளிநாடு செல்ல முற்பட்ட 51 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



சட்டவிரோத ஆட்கடத்தல்களைக் கட்டுப்படுத்தவதற்காகக் கடற்படையினரால் தொடர்ந்தும் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படுக்கின்றன. இந்த நிலையில், திருகோணமலை கடற்பரப்பில் நேற்று அதிகாலை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது படகொன்றுடன் குறித்த 51 பேரும் கைதுசெய்யப்பட்டனர் என்று கடற்படையின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. கைதானவர்களில் கடத்தல்காரர்கள் 6 பேர் உட்பட 41 ஆண்களும், 5 பெண்களும் மற்றும் 5 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கம்பஹா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 5 முதல் 56 வயதுக்குட்பட்டவர்களாவர்.

இவர்கள் திருகோணமலை துறைமுகப் பொலிஸாரிடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்படவுள்ளனர் என்று கடற்படையின் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-22)



# வெளிநாட்டுக்கு செல்ல முயன்ற 24 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 4

சட்டவிரோதமான முறையில் கடல்மார்க்கமாக வெளிநாடு செல்ல முயன்ற 24 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாரவில - தல்வில பிரதேசத்திலுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த நிலையிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றுலாவிகளுக்கு பெற்றோல் மறுப்பு

*இலங்கைக்குக் கரும்புள்ளி*
*பொலிஸார் மீது அதிருப்தி*

கொழும்பு, ஜுலை 4
காலியில் உள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தில், எரிபொருள் பெறச் சென்ற சுற்றுலாவிகளுக்கு எரிபொருள் மறுக்கப்பட்டமை இலங்கைக்குப் பெரும் கறுப்புப் புள்ளியை சர்வதேச அளவில் ஏற்படுத்தியுள்ளது என்று சுற்றுலா சபை தெரிவித்துள்ளது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குச் சென்ற சுற்றுலாவிகளுக்கு அங்கு கடமையில் இருந்த பொலிஸ் அலுவலர் எரிபொருள் வழங்க மறுத்துள்ளார். அத்துடன் "இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுங்கள். ஆனால், எரிபொருள் வழங்க முடியாது" என்றும் தெரிவித்துள்ளார். இது இலங்கைக்கு சுற்றுலா விடயத்தில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்றும் இதற்காக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் பொலிஸ்மா அதிபரை சுற்றுலா சபை கோரியுள்ளது. (ம)

### ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்;

# விசாரணை அறிக்கையின் 87 தொகுதிகள் இரகசியம்!

### நாடாளுமன்ற சிறப்புரிமை நடவடிக்கையாம்

**கொழும்பு, ஜுலை 4**

**உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் எஞ்சிய 87 தொகுதிகளை வெளியிட்டால் நாடாளுமன்றத்தின் சிறப்புரிமைகள் இழக்கப்படலாம் என்பதால் அவற்றை வெளியிட முடியாது என நாடாளுமன்றம் தெரிவித்துள்ளதாக கொழும்பு பேராயர் இல்லம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல் இடம்பெற்று தற்போது 38 மாதங்கள் கடந்துள்ள நிலையில், இதுவரை குற்றவாளிகள் யார்? இதற்கு பின்புலத்திலிருந்து செயற்பட்டவர்கள் யார்? என்பன குறித்தும் அவர்களை சட்டத்துக்கு முன் கொண்டு வருவதற்கு அரசாங்கத்தாலும், பொலிஸாராலும் முடியாமற் போயுள்ளதாக கொழும்பு பேராயர் இல்லம் அடிக்கடி குற்றஞ்சாட்டுகின்றது.

இந்த நிலையில், உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி வெளியிடப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய 87 தொகுதிகள் இதுவரை பொது வெளியில் வெளியிடப்படவில்லை.

அவற்றை பொதுவெளியில் வெளியிடுமாறு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு விடுத்திருந்த எழுத்து மூலமான கோரிக்கையை சபாநாயகர் நிராகரித்துள்ளார்.

மேலும், அவை நாடாளுமன்ற உறுப்பினர்களின் பார்வைக்காக நாடாளுமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றை பொது வெளியில் வழங்குவது நாடாளுமன்ற சிறப்பு உரிமைகளை மீறும் செயலாகும் எனவும் சபாநாயகர் தெரிவித்ததாக கொழும்பு பேராயர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



சங்கானை

## இலங்கை வங்கியில் திடீரென தீ விபத்து

யாழ்ப்பாணம், ஜுலை 4
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானைப் பகுதியிலுள்ள இலங்கை வங்கியின் மேல்தளத்தில் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீயணைப்புப் படையினருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்பு படை தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தது. சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

வங்கியின் இயந்திரத்தின் வயர் ஒன்றில் ஏற்பட்ட மின்னொழுக்கே தீவிபத்துக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-125)

## மான் வேட்டை: ஒருவர் கைது

கொழும்பு, ஜுலை 4
புத்தளம், வண்ணாத்திவில்லுப் பகுதியில் மானொன்றை வேட்டையாடி இறைச்சிக்காக விற்பனை செய்த குற்றத்துக்காக வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகளால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுத்துப்பாக்கியால் மானை வேட்டையாடி இறைச்சியை விற்பனை செய்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கருவலகஸ்வெள வன உயிரிகள் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மான் இறைச்சி விற்பனை இடம்பெறுகின்றது என்று வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதுடன், மானின் கொம்பு மற்றும் மானின் தோல் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. (எ-இ)

### தடைசெய்யப்பட்ட

## 11 கோடி ரூபாவுக்கும் அதிகமான பொருள்கள் சுங்கப்பிரிவால் மீட்பு

கொழும்பு, ஜுலை 4
நாட்டில் டொலர் தட்டுப்பாடு காரணமாகத் தடைசெய்யப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட சுமார் 11 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 6 கொள்கலன்கள் அடங்கிய பொருள்கள் சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்டவேளை சுங்கத் திணைக்களம் கைப்பற்றியுள்ளது.

இவற்றில் 5 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபானங்கள் மற்றும் சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த 6 கொள்கலன்களும் பரிசோதனையிடுவதற்காக வத்தளையிலுள்ள களஞ்சியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இவ்வாறான பொருள்கள் இறக்குமதி செய்யப்படும்போது ஏற்றுமதி இறக்குமதிப் பிரிவின் அனுமதி பெறப்படல் வேண்டும் என சுங்கத்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## சண்டிலிப்பாயில் சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜுலை 4
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் பகுதியில் சைக்கிள் திருட்டு இடம்பெற்றுள்ளது என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாதகல்-சகாயபுரம் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய யுவதியொருவரின் சைக்கிளே திருடப்பட்டுள்ளது. அந்த யுவதி இறைச்சிக் கடை ஒன்றின் முன்னால் தனது சைக்கிளை நிறுத்திவிட்டு தனது அலுவல்களை முடித்துவிட்டு வந்து பார்த்தபோது சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. முறைப்பாடு தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-125)

### மன்னார் மாவட்டத்தில்

## புதிய நடைமுறையில் பெற்றோல் விநியோகம்



மன்னார், ஜுலை 4
மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி தொடக்கம் புதிய நடைமுறைகளின் கீழ் (எரிபொருள் அட்டைக்கு) பெற்றோல் விநியோகிக்கப்படும் என்று மன்னார் மாவட்டச் செயலர் ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மன்னார் மாவட்டம் முழுவதும் பிரதேச செயலகங்கள் ஊடாக வாகனங்களுக்கென வழங்கப்பட்ட எரிபொருள் அட்டையின் அடிப்படையில் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் (நாளை) பெற்றோல் விநியோகிக்கப்படும்.

பிரதேச செயலகங்களில் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளை இணைத்து இந்த ஏற்பாடு செய்யப்படும். ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கான நேரம் முதல் நாள் அறிவிக்கப்படும். அத்துடன் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு விஷேடமாக வழங்கப்படும் எரிபொருள் விநியோகத்தின்போது சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அட்டையுடன் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக அட்டையையும் கொண்டு வருதல் அவசியம்.

மாந்தை மேற்குப் பிரதேசத்தில் எரிபொருள் நிலையம் இல்லாமையால் அருகிலுள்ள எரிபொருள் நிலையத்தினூடாக எரிபொருள் பகிர்ந்தளிக்கப்படும் - என்றார். (ம-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10 . 10 . 1948

இறப்பு 05 . 07 . 2021

கடந்த வருடம் 05.07.2021 அன்று சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர்

## சொக்கநாதன் யோகநாதன்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நாளை (05.07.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (Raja Cream House, No.37, Sir. Pon. Ramanathan Road, Jaffna) இவ் அஞ்சலி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக் கின்றோம்.

இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரம்படி வீதி,
கொக்குவில்.

குடும்பத்தினர்
077 918 5730

(CS 45464) (3/6)

# மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 11 . 1938

மறைவு 03 . 07 . 2022

## நாகமுத்து நவரட்ணம்

(ருவன்வெல்ல நாகமுத்து அன்சன்ஸ் உரிமையாளரும்,
சமாதான நீதவானும்)

காரைநகர் கருங்காலியை பிறப்பிடமாகவும், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட ருவன்வெல்ல நாகமுத்து அன்சன்ஸ் உரிமையாளரும், சமாதான நீதவானும் ஆகிய நாகமுத்து நவரட்ணம் நேற்று (03.07.2022) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - தெய்வானை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் - மீனாட்சி தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற சிவகாமசுந்தரியின் (ராதா) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, நடராஜா, நாகம்மா மற்றும் சுந்தரலிங்கம், சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரரும், ஸ்ரீநவரட்ணராஜா, ஸ்ரீநவசஜேந்திரன், நந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மங்கையற்கரசி, அகிலா, இரகுநாதன் ஆகியோரின் மாமனாரும், ஆதித்யா சயந்தன், கௌதமன், கிருஷ்ணா, கொன்ஸி, மாறன், மிதுன் ஆகியோரின் தாத்தாவும், கீர்த்தன்யா, சஞ்சயின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நாளை (05.07.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பார்வைக்கும், இறுதிக்கிரியைகள் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று அதே நாளில் கல்கிசை மயானத்தில் மாலை 5.00 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
நந்தினி (மகள் - 077 139 2444)
கௌதமன் (பேரன் - 076 550 3790)

தகவல்:
குடும்பத்தினர்

---

**யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்**
**பழைய மாணவர் சங்கம்**
**வருடாந்த பொதுச்சபை கூட்டமும் நிர்வாகத்தெரிவும்**

- காலம் : 10.07.2022 ஞாயிற்றுக்கிழமை
- நேரம் : மாலை 4.00 மணி
- இடம் : பாடசாலை பிரதான மண்டபம்

அனைத்து சங்க உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(cs 45463) (2.6)

நிர்வாக சபையினர்.

---

# SP Tourist Hotel

**We arelooking for suitable Candidates to fill the follwing Positions**

**Hotel Management Assistant**
- Hotel Management Assistant A diploma or equivalent qualification in Hospitality and Tourism Management from a recognized Institute.
- With minimum 3 years experience in hotel management or related fields.
- Good command of English and Sinhala

**Receptionist (Female / male)**
- Passed G.C.E A/L
- Good language skills in Sinhala and English
- 2-3 years experience in previous customer service delivery

**Cook (Female / male)**
- With 2-3 years experience
- Expertise in Western and Eastern cuisine

**House - Keeping (Female / male)**
- Ability to work in housekeeping activities such as sweeping, mopping, dusting, polishing and laundry.
- Experience in housekeeping would be an asset

**Waiter (Female)**
- One year Experience Spoken English & Singala

**Send your CVs and documents to sharu8689@gmail.com**
**Selected candidates will be called for interview**

**SP Tourist Hotel (Pvt) Ltd.**
**No.873 Hospital Road, Jaffna Srilanka.P.O Code 40000**
**075 960 2222**

---

## நீரில் மூழ்கி இளைஞர் மாயம்

கொழும்பு, ஜூலை 4 திக்வெல்ல - செத்தகல இயற்கை கடல் தடாகத்தில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கிக் காணாமற்போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

றுகுணு பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் 22 வயதுடைய இளைஞரே இவ்வாறு காணாமற்போயுள்ளார்.

இளைஞரை மீட்கும் பணி முன்னெடுக்கப்படுகின்றது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ச-இ)

---

# மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 03 . 1933

மறைவு 30 . 06 . 2022

## மாணிக்கம் சரஸ்வதி

(காலஞ்சென்ற நாதஸ்வர வித்துவான் மாணிக்கத்தின் மனைவி)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சரஸ்வதி கடந்த (30.06.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான குற்றாலிங்கம் - சின்னக்கண்ணம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குற்றாலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்பு மனைவியும், ராஜேஸ்வரி (நாதஸ்வரம்), புஸ்பராணி (தவில்), ரட்ணேஸ்வரி (நாதஸ்வரம் - மலேசியா), கண்ணாம்பாள், கண்ணன் (பிரான்ஸ்), ராமதாஸ் (பிரான்ஸ்), ரவீந்திரராஜா (பிரான்ஸ்), ராதாகிருஷ்ணன் (பிரான்ஸ்), ராம்குமார் (ஆசிரியர் - யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி), சுதாகர் (நாதஸ்வரம்), சபேசன் (நாதஸ்வரம்), பிரதீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் திருச்செல்வம், குமாரசிங்கம், காலஞ்சென்ற நாதஸ்வர வித்துவான் L.S. ஜெயநாதன் மற்றும் கிருஷ்ணவேணி, ஜெகதீஸ்வரி, சண்முகப்பிரியா, உமாமகேஸ்வரி, மோகனாங்கி, காலஞ்சென்ற யோகராணி, காயத்திரி, அருட்செல்வி ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிராமி, சரவணா, விமலன் (நாதஸ்வரம்), பிரசன்னா (தவில்), ரவிராகுலன், சரண், கோகுலன், ராகுலன், சோபனா, அபிநயா, ஐஸ்வர்யா, அபினாஷ், ஆகாஷ், அப்சரா, அதர்ஷ், சந்தோஷ், சௌமியா, லக்ஷிகா (மருத்துவ பீட மாணவி பெரதேனியா பல்கலைக்கழகம்), வர்ஷிகா (வவுனியா பல்கலைக்கழகம்), சங்கீத், சாரங்கன், கர்ணிகா, வர்ஷ்சனா, தஸ்மினா, கார்திகேயன், கோபிகன், துஷாந், திஷாந், துஷாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஹரிகரன், செந்தூரன், சகானா, பைரவி, வர்ணேஸ்வரன், அபினன், தனிகா, அபிஷ்கா, சாயிஷன், அபின்யா, சாயி அபிலேஷ், சாயி அபிலாஷ், சாயி ஆருஷா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் (நாச்சிமார் கோவிலடி) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
(077 858 9177)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20.10.1948 மறைவு 15.06.2021

### அமரர் கிருஷ்ணபிள்ளை செல்வராசா

(முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர் காங்கேசன்துறை)

ஓராண்டு முடிந்ததுவோ அப்பா...
உங்கள் அன்பு முகம் நீங்கிச் சென்று
ஓராண்டல்ல எத்தனை காலம் கடந்தாலும்
உங்கள் அழகிய நினைவுகள் என்றும்
எம்மை விட்டகலா
அன்பினால் பண்பினால் நட்பினால்
எம் அனைவரதும் உள்ளங்களிலும் குடியிருக்கும் எம்
தந்தையை நாம் என்றும் நினைத்திருப்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS 45287) (3/6) குடும்பத்தினர்
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்

# அமெரிக்க செனட் குழு அரசுக்கு கிடுக்கிப் பிடி!

**கொழும்பு, ஜூலை 4**

**சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியைப் பெற இலங்கை அரசாங்கத்துக்கு நிபந்தனை விதிக்க வேண்டும் என்று வெளிநாட்டு உறவுகள் தொடர்பான அமெரிக்க செனட் குழு தெரிவித்துள்ளது.**

அதற்கமைய, மத்திய வங்கியின் சுதந்திரம், ஊழலை ஒழிப்பதற்கு வலுவான நடவடிக்கைகள் எடுத்தல், சட்டத்தின் ஆட்சியை பாதுகாத்தல் என்பன பூர்த்தி செய்யப்பட்டால் மாத்திரமே இலங்கையுடன் உடன்படிக்கைக்கு வரவேண்டும் என குறித்த குழு கேட்டுக்கொண்டுள்ளது.

நிபந்தனை விதித்த அமெரிக்கா இந்தக் குழுவின் அதிகாரியால் ருவிற்றரில் வெளியிட்ட பதிவில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முக்கியமான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், கட்டுப்பாடற்ற கடன்சுமை மற்றும் மோசமான பொருளாதார நிர்வாகத்தால் இலங்கை தொடர்ந்து பாதிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

'இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதுடன், ஊழல் அபாயத்தை எதிர்ப்பதற்கு புதிய சீர்திருத்தங்களைச் சேர்ப்பதாகவே சர்வதேச நாணய நிதியத்தின் புதிய வேலைத்திட்டத்தின் நோக்கம்' என சர்வதேச நாணய நிதியம் தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளது.

இந்தப் பதிவுக்கு பதிலாளித்த அமெரிக்க செனட்டின் வெளிநாட்டு உறவுகள் குழு, அந்த முக்கியமான நடவடிக்கையை எடுக்காமல், கட்டுப்பாடற்ற கடன் மற்றும் மோசமான பொருளாதார நிர்வாகத்தால் இலங்கை தொடர்ந்து பாதிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளது.

(அ-ஒ-இ)

## நீண்ட நாள்களின் பின்னர் இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 4

பருத்தித்துறை கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 12 பேர் கடற்படையினரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தியாவில் மீன்பிடித் தடைக்காலத்தின் பின்னர் மீனவர்கள் கடந்த மாதம் முதல் மீன்பிடிக்கு வரத் தொடங்கியுள்ளனர்.

கடந்த சில நாள்களாக பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவு பகுதி கடற்பகுதிகளில் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு அதிகமாகவே இருந்தது. இந்தப் பகுதிகளைச் சேர்ந்த உள்ளூர் மீனவர்களின் 6 லட்சம் ரூபா பெறுமதியான வலைகளையும் இந்திய மீனவர்கள் சேதப்படுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று மாலை இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ஒ-26)

## மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 07 . 1952



இறப்பு 03 . 07 . 2022

### திருமதி அன்ரனி ஜெயரட்ணம் அன்னமலர் ஞானறஞ்சிதம்

குருநகரைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு அளம்பிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்ரனி ஜெயரட்ணம் அன்னமலர் ஞானறஞ்சிதம் அவர்கள் கடந்த (03.07.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்கராயர் சிசிலியா (கனகம்) தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை வெரோணிக்கா தம்பதியரின் மருமகளும் அன்ரனி ஜெயரட்ணம் (ஓய்வுபெற்ற கிராம சேவகர்) அவர்களின் பாசமிகு மனைவியும் பவ்லோனா (உமா. லண்டன்). அருட்பணி அன்ரனி ஜெயரஞ்சன் (அதிபர். புனித மடுத்தினார் குருமடம்). அன்ரனி டொன்பொஸ்கோ (ஆசிரியர் - குமுழமுனை மகாவித்தியாலயம்). ஆன் மடோனா (றமா. நோர்வே). காலஞ்சென்ற அன்ரனி சிங் ஆகியோரின் பாசமிகு தாயாரும். ஜெயக்குமார் (தயானந்தன் - லண்டன்). மேரி மக்டலின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கரைதுரைப்பற்று). ஜோய் அமலதாஸ் (நோர்வே) ஆகியோரின் மாமியாரும் மரியநாயகி (குருநகர்). காலஞ்சென்ற பி.பி.மரியதாஸ் (ஜான்சன்) ஆகியோரின் சகோதரியும் விறோஜ் (லண்டன்). டிலானி (லண்டன்). டினோஜா. தரோன் (நோர்வே). டிவைன்ஷா. தானியா (நோர்வே). டிஷானா .தேயா (நோர்வே) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (04.07.2022) திங்கட்கிழமை 2ஆம் குறுக்குத்தெரு. வேளாங்கன்னி வீதி குருநகரிலுள்ள திரு.ஆம்ஸ்ரோங் (பெறாமகன்) அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு மாலை 5 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் வழிபாடு இடம்பெறும் அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு அளம்பிலுள்ள அன்னாரின் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு. மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (06.07.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு. அளம்பில் சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் அருட்பணி அன்ரனி ஜெய[illegible] (94 77[illegible])
கணவர் அன்ரனி ஜெயரட்ணம் (94 7740 81413)

## மரண அறிவித்தல்



### திருமதி நாகேஸ்வரி இராமசாமி

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி இராமசாமி அவர்கள் 03.07.2022 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராமநாதன் நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்புச் சகோதரியும் திருமதி புஸ்பராணி (ஆசிரியர் - பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்). செல்வரட்ணம் (ஆசிரியர்-துணவி அ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகதாசன், வனஜா (மாகாணப் பணிப்பாளர் - தொழிற்துறைத் திணைக்களம் வட மாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அதிசயன், அற்சயா, ஆருக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2022) திங்கட்கிழமை பிற்பகல் 01 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டு. வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]ளை வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல் : குடும்பத்தினர்.
077 915 2351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28 அடி சிவன்...

திறந்து வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் நேற்றுக் காலை 7 மணியளவில் திருக் கேதீச்சர ஆலய பிரதம குரு சிவ சிறி தியாகராஜா கருணானந்த குருக்கள்





தலைமையில் இடம்பெற்றது.

இன்று திங்கள் மற்றும் நாளை செவ்வாய் நண்பகல் 12 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்த முடியும். பின்னர் கிரியைகள் இடம்பெற்று நாளை மறுதினம் புதன்கிழமை காலை சுப முர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இடம்பெறவுள்ளது. (அ-ஒ-56)

## வடக்கு...

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ஆர்.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

'மாகாணக் கல்வித் திணைக்களத்தால் இன்று இடம்பெறவிருந்த கல்விப் பொதுத்தராதர உயர்தர மாகாணமட்ட பரீட்சைகள் யாவும் மெய்நிகர் வழி மூலமே (ஒன்லைன் மூலமே)இடம்பெறும். இது தொடர்பான சுற்றறிக்கை மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பப்படும்' எனவும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் நெருக்கடி காரணமாக நாடு முழுவதிலும் உள்ள அனைத்துப் பாடசாலைகளையும் இன்று தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரையில் மூடுவதாக கொழும்பு அரசின் கல்வி அமைச்சு நேற்று விசேட அறிவிப்பு வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-125)

## ரோக்கன்...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஜூன் மாதம் 23 ஆம் திகதி நாட்டுக்கு வரவிருந்த கப்பல் வருகை தராது என்பது உறுதியாக அறிவிக்கப்பட்டதன் பின்னர், மக்களை அநாவசியமாக வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என்று அறிவித்தோம். அத்தோடு அதுவரையிலும் அதற்கு முன்னரான சில தினங்களாகவே வரிசைகளில் காத்திருந்தவர்களுக்கு மாத்திரம் பதிவு செய்து ரோக்கன் வழங்குமாறு பாதுகாப்பு துறையினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

அதற்கமைய வரிசைகளில் உள்ளவர்களை அங்கிருந்து அனுப்புவதற்கும், வரிசைகள் நீளாமல் இருப்பதற்கும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் இது தவறான முறைமைக்குள் சென்று, ஏற்கனவே வரிசைகளில் காத்திருந்தவர்களுக்கு ரோக்கன்கள் வழங்கி நிறைவு செய்து, புதிதாக இணைப்பவர்களுக்கும் அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாம் வழங்கிய ஆலோசனை இதுவல்ல. இவ்வாறு சிட்டைகளைப் பெறுவதற்காக ஒன்று கூட வேண்டாம் என்று கோருகின்றோம். எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னர் முறையான வழிமுறையொன்றின் கீழ் அவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அது வரையில் எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்குச் சென்று ரோக்கன்களை கோர வேண்டாம் - என்றார். (அ-ஒ-இ)

## 1990...

நிலையில் தற்போது ஆயிரத்து 600 ஆக அதிகரித்துள்ளதாகவும், இதனால் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியால் அம்புலன்ஸ் சேவையை உரிய நேரத்தில் வழங்குவதில் பல சவால்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

நோயாளிகளின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதில் 1990 அம்புலன்ஸ் சேவை தற்போது பல சவால்களை எதிர்கொண்டு வருகிறது என்பதை பொதுமக்களின் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறோம். எங்களின் தினசரி நோயாளர் இடமாற்றங்கள் ஆயிரத்திலிருந்து ஆயிரத்து 600 ஆக அதிகரித்துள்ளது. இந்த அதிகரித்த தேவையை தற்போதைய டீசல் நெருக்கடி மற்றும் எங்களிடமுள்ள அம்புலன்ஸ்கள் மூலமே நிர்வகிக்க வேண்டியுள்ளது. மேலும் எரிபொருள் பற்றாக்குறையால், எங்கள் ஊழியர்கள் தங்கள் பணிநிலையங்களுக்கு அறிக்கை செய்வதிலும் சிரமப்படுகிறார்கள். மேற்கூறப்பட்ட மூன்று சிக்கல்கள் காரணமாக, நாங்கள் முன்பு பராமரித்து வந்த சராசரி நோயாளர் அணுகல் நேரமான 13 - 20 நிமிடங்களில், பொதுமக்கள் தற்போது தாமதத்தை அனுபவிக்க நேரிடலாம்.

கடந்த காலங்களில் நாங்கள் வழங்கியவாறு தடையற்ற மற்றும் திறமையான சேவையை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக எங்களின் அன்றாட சேவை வழங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன, மேலும் அந்த சேவை தரத்தை பேணுவது தற்போது அதிகரித்து வரும் சவாலாக இருப்பதை நாங்கள் காண்கிறோம்.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் மேலும் ஒரு பிரச்சினையை பொதுமக்களுக்கு சுமத்துவது எங்களின் நோக்கமல்ல, ஆயினும் எங்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட தாமதங்கள் அல்லது அசௌகரியங்கள் ஏற்பட்டால் பொறுத்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது. (அ-ஒ-5)

## யாழ்., கிளி.யில்...

பகுதியிலும் பதுக்கப்பட்டிருந்த 7 ஆயி



ரத்து 400 லீற்றர் டீசல் நேற்று மீட்கப்பட்டுள்ளது. அதனுடன் 200 லீற்றர் பெற்றோல் மற்றும் 225 லீற்றர் மண்ணெண்ணெயும் மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக கரடிப்போக்கு பகுதியிலுள்ள வீடு சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. வீட்டுக் காணியிலிருந்து 33 கொள்கலனில் 6 ஆயிரத்து 800 லீற்றர் டீசலும், 1 கொள்கலனில் 200 லீற்றர் பெற்றோலும், மற்றுமொரு கொள்கலனில் 25 லீற்றர் மண்ணெண்ணெயும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

**யாழ்ப்பாணம்**

அளவெட்டி தெற்கில் கடை ஒன்றில் டீசல் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்ட சோதனையில் 291 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை - தும்பளைப் பிரதேசத்தில் வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 400 லீற்றர் டீசல் மற்றும் 200 லீற்றர் மண்ணெண்ணெய் என்பன பொலிஸ் புலனாய்வுத் தகவலுக்கு அமைவாக பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை - டீசல் லீற்றர் ஆயிரத்து 700 ரூபாவுக்கும், பெற்றோல் லீற்றர் 3ஆயிரம் ரூபாவுக்கும், மண்ணெண்ணெய் லீற்றர் ஆயிரத்து 500 ரூபாவுக்கும் கறுப்பு சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (அ-ஒ-113-125)

## பேக்கரி...

யுள்ளதாக யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலர் கா.பாஸ்கரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

நகர்ப்புறங்களில் உள்ள பல பேக்கரிகள் டீசல் இன்றி மூடப்பட்டுள்ளன அல்லது உற்பத்தியைக்குறைத்துள்ளன. கிராமப் பகுதிகளில் மண் போறணைகளில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள்களையும் விநியோகம் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. கடும் நெருக்கடிகளுக்கு மத்தியில் பேக்கரி உரிமையாளர்களால் மக்களின் நலன் கருதி தம்மால் இயன்ற அளவு பாண் உற்பத்தியை மேற்கொள்கின்றனர்.

பேக்கரி உற்பத்திப் பொருள்களின் பாவனையாளர்கள் தமது பிரதேசத்திலுள்ள பேக்கரிகளில் நேரடியாகச் சென்று பாண் உற்பத்திப் பொருள்களை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். எமது பேக்கரிகளுக்குத் தேவையான டீசல் மற்றும் பெற்றோல் விநியோகிக்கப்படும் வரை இந்தநிலை தொடரும் - என்றுள்ளது. (அ-ஒ-5)

## அடுத்த வாரம்...

குறித்து இறுதி முடிவெடுக்கப்படவில்லை எனவும் தகவல்கள் வெளியாகின்றன.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் காணப்படும் நீண்ட வரிசைகள் காரணமாக அத்தியாவசிய சேவையைச் சேர்ந்தவர்களால் எரிபொருள்களைப் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது. மேலும் 10ஆம் திகதிக்கு பின்னர் எரிபொருள் வரும்வரை இந்த நிலைமை தொடரலாம் என்ற அச்சநிலை காணப்படுகின்றது. இதன் காரணமாகவே அரசாங்கம் நாட்டை தற்காலிகமாக முடக்குவது குறித்து ஆராய்ந்து வருகின்றது.

தற்காலிக முடக்கம் காரணமாக நாட்டில் மீதமுள்ள எரிபொருள்களை அத்தியாவசிய சேவைகளை சேர்ந்தவர்கள் மாத்திரம் பெற்றுக்கொள்ளும் நிலையை ஏற்படுத்த முடியும் என அரசாங்க தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் எதிர்வரும் 9 ஆம் திகதி அரசாங்கத்துக்கு எதிராக தலைநகர் கொழும்பில் மிகப் பெரிய போராட்டம் இடம்பெறக்கூடும் என்ற புலனாய்வுத் தகவல்களையும் மையமாக வைத்து இந்த முடக்கம் தொடர்பில் அரசு ஆராய்வதாகத் தெரிகின்றது. (அ-ஒ-இ)

## ரயில்...

இந்தச் சம்பவம் மன்னார் இசைமாலை தாழ்வுப் பகுதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மாளிகைப்பிட்டியைச் சேர்ந்த கணபதி கனகராஜ் (வயது - 27) என்பவர் உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம் நோக்கிப் பயணித்த ரயில், இசைமாலை தாழ்வுப் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, ரயில்வே கடவையை மோட்டார் சைக்கிளில் கடந்த குடும்பத் தலைவரை மோதியுள்ளது. சுமார் 100 மீற்றர் தூரம் ரயில் அவரை இழுத்துச் சென்றுள்ளது. சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார். (அ-ஒ-60)

## யாழில்...

அந்தக் கடிதத்தில்,

எரிபொருள் வழங்கலின்போது சில பிரதேச செயலகங்களில் சமுர்த்திப் பணியாளர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். பிரதேச செயலர்களின் மேற்பார்வையில் எரிபொருள் விநியோகம் இடம்பெறும் நிலையில், அவர்களின் கீழ் அத்தியாவசிய பணியாற்றும் சமுர்த்திப் பணியாளர்களுக்கு எரிபொருள் வழங்காமல் ஏனைய பணியாளர்களுக்கு எரிபொருள் வழங்கி புறக்கணித்துள்ளனர்.

இதனைக் கண்டித்தும் எமது பணியாளர்களுக்கு சீரான எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்படும் வரை பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளோம் - என்றுள்ளது. (அ-ஒ-5)

## ரம்புட்டான்...

(வயது - 10) என்ற சிறுவனே நேற்று பிற்பகல் உயிரிழந்துள்ளான்.

மதியம் 2 மணியளவில் சிறுவன் வீட்டில் ரம்புட்டான் பழம் சாப்பிடும் போது அதன் விதையையும் சேர்த்து விழுங்கியுள்ளான். இதனால் மூச்சுவிடுவதில் சிரமம் ஏற்பட்ட நிலையில் தெல்லிப்பழை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும் போது சிறுவன் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை வலி.கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-26-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடலில் மூழ்கி யுவதி இறப்பு!

கொழும்பு, ஜூலை 4
பமுனுகம, உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தில் கடல் அலையில் நடந்து சென்ற யுவதி ஒருவர் அலையில் சிக்கி கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்திலுள்ள விடுதி ஒன்றில் இடம்பெற்ற வைபவம் ஒன்றுக்காக ஏனைய நபர்களுடன் வந்த அவர், விடுதிக்குப் பின்புறமாக உள்ள கடற்கரையில் உலாவச் சென்று கொண்டிருந்தபோதே இந்த அசம்பாவிதம் நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கடவத்த, பியன்வில பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பமுனுகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## இலங்கைக்கான

# விமான சேவைகள் மேலும் குறைப்பு

கொழும்பு, ஜூலை 4
எரிபொருள் சேமிப்புக் குறைவடைந்ததால் இலங்கைக்கான விமான சேவைகள் குறைவடைந்துள்ளன என்று துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-
விமானப் போக்குவரத்துத் துறையில் காணப்படும் எரிபொருள் நெருக்கடியால் வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்பவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள்.

எனவே இந்த நிலைமையைச் சமாளிக்க தற்போதுள்ள விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் -என்றார். (ம)

# நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஓமான் ஆதரவளிக்கும்

## அந்த நாட்டின் தூதுவர் உறுதி

கொழும்பு, ஜூலை 4
நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைக்கு ஓமான் ஆதரவளிக்கும் என்று இலங்கைக்கான ஓமான் தூதுவர் அஹமட் அலி சயீட் அல் ரஷீட் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியை சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;
எரிபொருள், எரிவாயு, வேலைவாய்ப்பு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு போன்றவற்றில் இலங்கைக்கும் ஓமானுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கு ஓமான் ஆதரவளிக்கும் -என்றார்.

இதன்போது இலங்கையிலுள்ள பயிலுநர்களுக்கான வேலைவாய்ப்புக்களை ஓமானில் அதிகரிப்பதற்கு ஒத்துழைக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஓமானியத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-14-இ)

# நாமலின் ஆலோசனைக்கு கூட்டுக் கட்சிகள் எதிர்ப்பு!



கொழும்பு, ஜூலை 4
இந்த அரசாங்கத்தை மாற்றி புதிய அரசாங்கத்தை உருவாக்கவேண்டுமென பொதுஜன பெரமுனவின் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச முன்வைத்த யோசனையை விமல் வீரவன்ஸ தலைமையிலான கூட்டுக் கட்சிகள் நிராகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவுடன் நடத்திய தனிப்பட்ட சந்திப்பில், இந்த அரசாங்கத்தை அகற்றிவிட்டு, பொதுஜன கட்சியின் பங்காளிகளுடன் இணைந்து புதிய அரசாங்கத்தை உருவாக்குவது தொடர்பான யோசனையை தெரிவித்ததுடன், கூட்டுக் கட்சிகளுடன் இது தொடர்பாகக் கலந்துரையாடும்படி கேட்டுக் கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற சுயாதீன கூட்டுக் கட்சிகளின் தலைவர்களின் கலந்துரையாடலின்போது நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார கட்சித் தலைவர்களுக்கு நாமலின் யோசனையை அறிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆலோசனையை அனைத்துக் கட்சித் தலைவர்களும் கடுமையாக விமர்சித்ததுடன், யோசனையை நிராகரித்துள்ளனர் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அங்கு இது தொடர்பில் கருத்து தெரிவித்த கூட்டுக் கட்சிகளின் தலைவர்கள், இந்த நெருக்கடிக்கு ராஜபக்சக்களே முழுக் காரணம் என்பதால் அவர்களுடன் இணைந்து இனி ஆட்சியமைக்க முடியாது எனத் தெரிவித்துள்ளனர். அதனால் நாமல் ராஜபக்சவுடன் எந்தவிதக் கலந்துரையாடலும் நடத்துவதில்லை என கூட்டுக் கட்சிகளின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர் என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

Student Visa and Work Visa
* Canada Work Program Available - IELTS தேவையில்லை.
* Canada, U.K, Australia, Newzeland Student Visa IELTS தேவை.
* Visitor / Tourist Visa ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
Visa Consultant
134, Adiyapatham Road, Thirunelvely. 077 038 5584
mail - naltcjaffna@gmail.com (cs 19874) (2.6)

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



புண்ணியமூர்த்தி பரமேஸ்வரி
(ஓய்வுபெற்ற ஆசிரியை)
(திதி: ஸ்கந்தபஞ்சமி)

பிறந்த ஆண்டு 24.05.1936
இறந்த ஆண்டு 14.07.2021

விழிகள் நீர் காயவில்லை
உம் மழலை மொழி மறக்கவில்லை
மாதம் பன்னிரண்டு ஆன பின்பும்
உம் மழலை முகம் மனக்கண்ணின் முன்னே!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# கடற்பகுதிகள் கொந்தளிப்பு!

## வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 4
நாட்டின் பெரும்பாலான கடற்பரப்புகளில் கொந்தளிப்புக் காணப்படும் என்றும் இதனால் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் பலஇடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

கொழும்பிலிருந்து காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும்.

புத்தளத்திலிருந்து கொழும்பு வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும்.

எனவே கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும் -என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.